لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





செப்டம்பர் - 2011

# ஈசா (அலை) அவர்களின் மரணம்

## திருக்குர்ஆனிலிருந்து...

முஹம்மது ஒரு இறை தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன்தோன்றிய எல்லா இறை தூதர்களும் மரணமடைந்து விட்டனர். *(3:145)*

உமக்கு முன்னர் எந்த மனிதருக்கும் என்றென்றும் வாழும் (மிக நீண்ட) வாழ்க்கையை நாம் வழங்கியதில்லை. எனவே நீர் மரணித்து அவர்கள் மட்டும் என்றென்றும் உயிருடன் இருப்பதா? *(21:35)*

நாம் (இறை தூதர்களாகிய) அவர்களுக்கு உணவு உண்ணாத உடல்களை வழங்கவில்லை. அவர்கள் மிக நீண்ட காலம் வாழ்ந்ததுமில்லை. *(21:9)*

## நபிமொழியிலிருந்து...

“நிச்சயமாக மர்யமின் மகன் ஈசா 120 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்கள்.”

*(மவாஹிபுல் லதுன்யா தொகுதி 1 பக்கம் 42)*

“நிச்சயமாக மர்யமின் மகன் ஈசா (அலை) அவர்கள் 120 ஆண்டுகள் உயிருடன் இருந்தார்கள். மேலும் நான் அநேகமாக 60 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் (உலகை விட்டுச்) செல்வேன் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறியதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.”

*(கன்ஸூல் உம்மால் புதிய பதிப்பு தொகுதி 11 பக்கம் 479, தொகுதி 6 பக்கம் 160)*

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூல்களிலிருந்து...

“எவருமே வானத்திலிருந்து இறங்கி வரமாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுடைய எதிரிகள் எல்லாரும் மரணமடைவார்கள். ஆனால் இவர்களில் எவரும் ஈஸா நபி வானத்திலிருந்து இறங்கி வருவதைக் காணமாட்டார்கள். இவர்களுடைய சந்ததிகள் கூட இறந்து போவார்கள். ஆனால் அவர்களும் ஈஸா நபி இறங்குவதைக் காணமாட்டார்கள். பிறகு சந்ததிகளின் சந்ததிகளும் மரணித்து விடுவார்கள். ஆனாலும் ஈஸா நபியை அவர்கள் காணவே மாட்டார்கள். அப்போது இறைவன் அவர்களுடைய உள்ளத்தில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்துவான். அதாவது சிலுவையின் வெற்றிக் காலம் முடிவடைந்து விட்டது. உலகம் வேறொரு நிலைமைக்கு மாறி விட்டது. ஆனாலும் மர்யமின் மகன் ஈஸா வரவில்லையே என்று கலக்கமடைவார்கள். அப்போது சிந்தனையாளர்கள் இந்த மூடநம்பிக்கையைக் கைவிட்டு விடுவார்கள்.

இன்றிலிருந்து முன்னூறு ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னாலேயே ஈஸா நபியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்களாகட்டும் கிறிஸ்தவர்களாகட்டும் அவர்கள் தமது இந்தப் பொய்யான கொள்கையை கைவிட்டு விடுவார்கள்.

பிறகு உலகில் ஒரே மார்க்கம், ஒரே வழிகாட்டி என்ற நிலை உருவாகிவிடும். நான் ஒரு விதையை விதைப்பதற்காகவே வந்துள்ளேன். அந்த விதை விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும்; அதைத் தடை செய்ய எவராலும் இயலாது.

*(ரூஹானிகஸாயின் தொகுதி 20 பக்கம் 67)*

தொடர்: 11

# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி)

## மக்கள் மத்தியில்

சத்யார்த் பிரகாஷ் என்னும் தமது நூலில் ஸ்வாமி தயானந்த், முஸ்லிம்கள் தங்களின் சகமதஸ்தர்களை ஹிந்துக்கள் என்று கூறுவதன் மூலம் இழிவுபடுத்துகின்றனர். ஏனென்றால் 'ஹிந்து' என்றால் அடிமை என்று பொருள் என்று குறிப்பிட்டிருந்தார்.

(இந்தச் செய்தி சத்யார்த் பிரகாஷ் முதல் பதிப்பு, ஸ்டார் அச்சகம், வாரணாசி 1875 அதிகாரம் 3 பக்கம் 67-ல் காணப்படுகிறது. இந்நூலில் பிந்தைய பதிப்புகளில் இந்தச் செய்தி காணப்படவில்லை.)

இது ஒரு விஷமத்தனமான கருத்தாக இருந்ததால் இதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு மறுப்பு எழுதினார்கள். அது அமிர்தசரஸிலிருந்து வெளிவரும் வக்கீல் என்ற பத்திரிகையில் 1879 அல்லது 1881-ல் வெளிவந்தது. இதில் ஸ்வாமியின் மேற்சொன்ன கருத்தை மறுத்து இஸ்லாம் தோன்றுவதற்கு நீண்டகாலம் முன்பிருந்தே இந்தியர்களைக் குறிப்பிடு வதற்கு 'ஹிந்து' என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதை எடுத்துக் காட்டினார்கள். இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பிருந்த அரேபிய நூல்களில் ஹிந்து என்ற சொல் பயன் படுத்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருந்தார்கள். மகேஷ் சந்த், அருட் திருதாமஸ் ஹோவெல் போன்றவர் களும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இந்தக் கருத்தை ஆதரித்து பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதினார்கள்.

மறு பிறவிக் கொள்கையை மறுத்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் நீண்ட கட்டுரை எழுதினார்கள். அது லாஹூரிலிருந்து வெளிவந்த 'ஹிந்து பந்து' என்னும் பத்திரிகையில் 1879 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாத இதழ்களில் வெளிவந்தது. அக்கட்டுரையின் இன்னொரு பகுதியை பத்திரிகையின் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது கட்டுரைத் தொடரில் எழுப்பியிருந்த அற்புதமான வாதங்களுக்கு ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களால் பதிலளிக்க முடியாத காரணத்தால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அனுப்பிய அடுத்த தொடரை அவர் வெளியிடவில்லை. காதியானைச் சேர்ந்த ஷரம்பத் ராய் என்பவர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி மக்கள் மத்தியில் புகழ்பெற விரும்பினார். அவர் தாமே ஒரு கட்டுரை எழுதி 'ஹிந்து பந்து' பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பினார். ஆனால் அவருடைய அறியாமையையும், கட்டுரையில் உள்ள கருத்துகளையும் பத்திரிகை ஆசிரியர் வெளிப்படையாகக் குறை கூறியதால் தர்ம சங்கடத்திற்கு ஆளானார்.

1879 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சிவ நாராயண் அக்னி ஹோத்ரி என்பவருடன் இறைவெளிப்பாடுகள் தொடர்பாக ஒரு விவாதம் நடத்தினார்கள். இது தொடர்பாகப் பல கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பிற்காலத்தில் அவை பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன என்று தெரிகிறது. அக்னி ஹோத்ரி லாஹூரிலுள்ள ஓர் அரசுப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரே 'ஹிந்து பந்து' பத்திரிகையின் ஆசிரியரும், அதிபரும் ஆவார். பிரம்ம சமாஜ அமைப்பின் தலைவராகவும் கருதப்பட்டார். அந்த அமைப்பு இறை அறிவிப்புகள் கிடைப்பதை மறுத்து வந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களோடு அவர் நடத்திய விவாதம் 1879 ஆம் ஆண்டு மே21 ஆம் நாள் முதல் ஜூன் 17 ஆம் நாள் வரை நீடித்தது. அக்னி ஹோத்திரியின் விஷயத்திலும் காரக் சிங்கிற்கு நிகழ்ந்தது போலவே நடந்தது. தம்முடைய வாழ்நாளின் பிற்பகுதியில் அவர் பிரம்ம சமாஜத்தை விட்டு வெளியேறினார். எதிரிகள் மனதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஏற்படுத்திய தாக்கம் வியப்புக்குரிய விதத்தில் வேலை செய்தது. அவர்கள் தம் கொள்கைக்காக வரிந்து கட்டிக் கொண்டு வாதிட முன் வந்தனர். ஆனால் முடிவில் தம்

கொள்கைகளில் இருந்த தவறுகளை உணர்ந்து கொண்டவர்களாகத் திரும்பிச் சென்றனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் ஆன்மீக ஆற்றல் அத்துணை வலிமையுடையதாக இருந்தது! இறையறிவிப்பு என்று ஒன்று இருப்பதையே அக்னிஹோத்ரி மறுத்து வந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கொள்கைகளை மறுப்பதற்காகவே அவற்றைப் படித்தார். ஆனால் ஒருகாலம் வந்தது. அப்போது அவர் பிரம்ம சமாஜத்தோடு தமக்கிருந்த தொடர்ப்பையே துண்டித்துக் கொண்டார். தாமே இறையறிவிப்புகளைப் பெறுவதாகக் கூறினார். பிற்காலத்தில் தம் சொந்த சபையான 'தேவ் சமாஜம்' என்ற அமைப்பைத் துவங்கினார். அவரது வாதம் சரியானதா அல்லது தவறானதா என்பது வேறு விஷயம். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எழுத்துக்கள் அவரிடம் ஓர் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டு வந்தன என்பது மட்டும் உண்மை. அதன் காரணமாக எந்தக் கொள்கையை மறுக்க அவர் முன் வந்தாரோ அதே கொள்கையை அவரே போதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். சிந்திப்பதற்கு இதில் போதுமான விஷயம் இருக்கிறது.

### அத்தியாயம் 7

### இஸ்லாமியப் பணி

ஆரம்பத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுவதன் பக்கம் மட்டும் கவனம் செலுத்தி வந்தார்கள். ஆனால் இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தின் மீதான தங்கள் தாக்குதல்களை அதிகரித்த பொழுது முஸ்லிம்கள் அதனை எதிர் கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். இதனைக் கண்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உணர்வு கிளர்ந்தெழுந்தது. ஓர் இறையறிவிப்புக் கிணங்க அவர்கள் ஒரு நூல் எழுதத் தீர்மானித்தார்கள். எதிரிகளின் அனைத்து ஆட்சேபணைகளையும் முறியடித்து அவர்கள் இஸ்லாத்திற்கெதிராக குரலெழுப்பத் துணியாத அளவிலான ஆதாரங்களையும், அப்படியே அந்த எதிரிகள் ஆட்சேபணைகளை எழுப்பினாலும், அதற்கும் தக்க பதில் தரும் அளவுக்கு முஸ்லிம்களை ஆயத்தப்படுத்தும் விதத்தில் வாதங்களையும் எடுத்து வைக்க முடிவு செய்தார்கள். இந்த உறுதிப்பாட்டோடு மிகப் பெரிய நூலான 'பராஹீனே அஹ்மதிய்யா' என்னும் நூலை எழுத ஆரம்பித்தார்கள். இதன் மூலம் 1864 அல்லது 1865-ம் ஆண்டில் அவர்கள் கண்ட ஓர் ஆன்மீக காட்சி நிறைவேறியது. அந்தக் காட்சியில் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் கையில் நூல் ஒன்றை வைத்திருந்தார்கள். அந்நூல் அவர்களே எழுதியது போல் தோற்றமளித்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கைபட்டதும் அது ஒரு அழகிய பழமாக மாறியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பழத்தை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக வெட்டினார்கள். அப்போது அதிலிருந்து பெருமளவில் தேன் சொட்டியது. இறந்த ஒரு மனிதனை உயிர் பெற்றெழச் செய்வதாகவும் அந்தக் காட்சியில் கண்டார்கள்.

அந்நூலின் ஒரு பகுதி (சுமார் 2500 பக்கங்களைக் கொண்டது) 1879 ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது. அப்போது அது தொடர்பாக ஓர் அறிவிப்பு ஸமீமா இஷாஅத்துஸ் ஸுன்னா என்னும் ஒரு பத்திரிகையில் வெளிவந்தது. அந்த அறிவிப்பில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின் வருமாறு கூறுகிறார்கள்:

"ஆரிய சமாஜத்தினரின் கொள்ககளின் காரணமாக இந்த நூலை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. அவர்கள் மூஸா, ஈஸா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆகிய இறைதூதர்களைப் பொய்யர்கள் என்றும், அவர்கள் கொண்டுவந்த வேத நூல்கள் பொய்யானவை என்றும் போதிக்கின்றனர். எல்லா புனிதவான்கள் மீதும் அவதூறுகளை அள்ளி இறைப்பதைத் தம் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஒருவர் ஸஃபரே ஹிந்த் என்ற பத்திரிகை வாயிலாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு இது தொடர்பாக நீண்டகாலமாக சவால் விடுத்து வந்தார்.

இந்த நூலை வெளியிடுவதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் போதிய பணவசதி இல்லாமல் இருந்தது. அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அதன் பின் கிடைத்த ஓர் இறைகட்டளைக் கிணங்க மக்களிடம் இந்தப் பணிக்காக நன்கொடை வழங்குமாறு வேண்டுகோள்

விடுத்தார்கள். இந்த நூலை வாங்கும் எண்ணம் கொண்டோர் முன்னதாகவே பணம் செலுத்துவதன் மூலம் நூல் வெளிவர உதவுமாறு கேட்டுக் கொண்டர்கள். அப்போது முஸ்லிம்கள் மத்தியில் நிலவிய வறுமையின் காரணமாகவும், மார்க்க விவகாரங்களில் அவர்களின் ஆர்வமில்லாத தன்மை காரணமாகவும் அந்த வேண்டுகோளுக்கு அதிக பலன் எதுவும் ஏற்படவில்லை. இருந்தபோதிலும் சிறு நன்கொடைகளும், சிறிதளவு முன்பணமும் கிடைத்தன. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதனைக் கொண்டு நூல் வெளிவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். பட்டியாலாவைச் சேர்ந்த கலீஃபா செய்யது முஹம்மது ஹுஸைன் என்பவர் முதன் முதலில் ₹ 250/- நன்கொடை வழங்கும் பாக்கியம் பெற்றார். அதைத் தொடர்ந்து மேலும் சிலர் நன்கொடை வழங்கினர்.

அந்நூலின் முதல் இரண்டு பாகங்கள் 1880-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. அதில் முதல் பாகம் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட ஓர் அறிக்கையாக அமைந்தது. அது மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளை விரிவாக எடுத்துக் கூறியிருந்தார்கள். வேறு மார்க்கத்தைச் சேர்ந்த எவராவது ஒருவர் அதைப் போன்ற சிறப்புகள் தமது மார்க்கத்திலும் இருப்பதாகவோ அல்லது பாதி அல்லது நான்கில் ஒரு பங்கு அல்லது ஐந்தில் ஒரு பங்கு தமது மார்க்கத்திலும் இருப்பதாக நிரூபித்தாலோ அல்லது அந்நூலில் திருக்குர்ஆனின் மேன்மைக்குச் சான்றாகத் தாம் எடுத்து வைத்திருக்கும் வாதங்களை மறுத்தாலோ தாம் அவருக்கு ₹ 10,000/- மதிப்புள்ள தமது சொத்தை பரிசாக வழங்குவதாக அறிவித்திருந்தார்கள்.

மூன்றாம் பாகம் 1882 ஆம் ஆண்டும் நான்காம் பாகம் 1884-ஆம் ஆண்டும் வெளிவந்தன. பல்வேறு காரணங்களால் நூல் வெளிவருவதில் காலதாமதம் ஏற்பட்டது. **நூலை அச்சிட்டு வந்த அமிர்தசரஸ் ஸஃபீரே ஹிந்த் அச்சக உரிமையாளரின் உடல்நலக் குறைவு முக்கியமான காரணமாக அமைந்தது. அவர் ஒரு கிறித்தவர் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.** நான்காவது பாகம் வெளியிடுவதில் ஏற்பட்ட கால தாமதத்திற்குக் காரணம், முதல் மூன்று பாகங்களுக்கு எதிராக வெளியான ஆட்சேபணைகளை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. 1883 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மூத்த சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் அவர்களின் மரணமும் தாமதத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது.

ஐந்தாவது பாகம் 1905 ஆம் ஆண்டு வெளிவந்தது. அது முதல் நான்கு பாகங்களின் தொர்ச்சியாக இல்லாமல் முற்றிலும் புதிய நூலாக அமைந்திருந்தது. **உண்மையில் 300 வாதங்களைக் கொண்ட அந்நூல் 1879 ஆம் ஆண்டு மே மாதமே எழுதி முடிக்கப்பட்டுவிட்டது.** ஆனால் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. 300 வாதங்களில் ஒரே ஒரு வாதம் மட்டும் தான் முதலில் வெளியிடப்பட்ட நான்கு பாகங்களிலும் விவரிக்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என அவர்கள் அறிவித்த 1882 ஆண்டு மார்ச் மாதம் முதல் அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகள் காரணமாக அந்நூலுக்காகத் தாம் கையெழுத்துப் பிரதியாக எழுதிவைத்திருந்த அனைத்து விஷயங்களையும் அச்சிட்டு வெளியிட இயலவில்லை. அவர்களுக்கு இவ்வாறு இறையறிவிப்பு வந்தது: “குல் இன்னீ உமிர்த்து வஅனா அல்வலுல் முஸ்லிமீன்.” (பொருள்:கூறுக! நான் நியமிக்கப் பட்டுள்ளேன்; கீழ்ப்படிபவர்களுள் நான் முதல்வனாக இருக்கிறேன்.) நீண்ட காலத்திற்குப் பின்னர் தான் அவர்கள் இந்தப்பணியை முறைப்படி செய்தார்கள். அது இஸ்லாத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சிறந்த வழிமுறை யாக அமைந்தது. அந்நூலின் முந்தைய பாகங்களில் கூறப்பட்டிருந்த முன்னறிவிப்பு கள் நிறைவேறியிருந்தன என்பது மட்டுமல்லாமல், இஸ்லாத்தின் மேன்மையை விளக்கும் மிகச் சிறந்த ஆதாரங்களை இடைப் பட்ட காலத்தில் இறைவன் வழங்கியிருந்தான். எனவே பழைய வாதங்களின் தேவை இல்லாமல் போய் விட்டது. அச்சிட்டு வெளியிடப்படாத அந்நூலின் கையெழுத்துப் பிரதிகளை அதற் கெனத் தனியாகச் செய்யப்பட்ட ஒரு பெட்டி யில் வைத்துப் பாதுகாத்து வந்தார்கள் ஆயினும்

அவை பிற்காலத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் எரிந்து விட்டன என்று கூறப்படுகிறது.

நூலின் விலையைப் பற்றி அன்னாரின் எதிரிகள் ஆட்சேபணை எழுப்பினார்கள். முதலில் 1879 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிவித்தது என்னவென்றால். முன் பணமாக ₹ 5 /- செலுத்தும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றும்15 ஜுஸ்வுகளைக் கொண்ட (ஒரு ஜுஸ்வு என்பது பெரிய தாளில் 4 பக்கங்களைக் கொண்டது) 10 பாகங்கள் வழங்கப்படும் என்பதாகும். பொருள் வசதிபடைத்த முஸ்லிம்கள் பலரும் இந்தப் பணிக்காகப் பெருமளவில் உதவி செய்வார்கள் என அவர்கள் அந்நேரம் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிபார்த்த அளவுக்கு மக்களிடம் ஆர்வமில்லை. மேலும் நூலின் தயாரிப்புச் செலவும் பிரதி ஒன்றுக்கு ₹ 25/- வரை ஆனது. எனவே அவர்கள் முஸ்லிம்களுக்கு ₹ 10/- க்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ₹ 25/- க்கும் வழங்குவதாக அறிவித்தார்கள். மார்க்கத்தின் நன்மைக்காகவும், சேவைக்காகவும் அந்நூலை அவர்கள் மக்கள் மத்தியில் பெரிதும் பரப்ப எண்ணினார்கள். அந்நூலின் பல பிரதிகளை அவர்கள் இலவசமாக அனுப்பினார்கள். வாங்குவார்கள் அல்லது திருப்பி அனுப்புவார்கள் என்ற நம்பிக்கையில் பலருக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நூல் எழுதி முடித்ததும் எவ்வளவு பெரிதாக அமையும் என்று அவர்களாலேயே கணிக்க முடியவில்லை. எனவே எவ்வளவு காலத்திற்குள் அது அச்சிட்டு வெளியிடப்படும் என்ற காலக் கெடு எதுவும் அவர்கள் நிர்ணயிக்கவில்லை. 1884 ஆம் ஆண்டு நான்கு பாகங்கள் வெளியிடப்பட்டன. அவை 150 ஜுஸ்வுகள் வரை இருந்தன. இதுவே அவர்கள் முதலில் வாக்குறுதி அளித்த அளவாகும். எனவே வியாபார நோக்கில் இதை நாம் அணுகினோம் என்றால், ஆரம்பத்தில் முன் பணம் செலுத்தியவர்களுக்கு அவர்கள் செலுத்திய பணத்தின் மதிப்புக்கு நூல்கள் கிடைத்துவிட்டன.

1886 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நூல் வெளிவரும் விஷயத்தில் ஆரம்பத்தில் போடப்பட்ட திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதால், தாம் முதலில் நினைத்தபடி 300 ஜுஸ்வுகள் வெளியிட வேண்டிய தேவை இல்லை என்று தாம் கருதுவதாக அறிவித்தார்கள். பிற்காலத்தில் இறைவன் அவர்கள் இந்தக் காலத்திற்கான சீர்திருத்தவாதியாகத் தேர்ந்தெடுத்ததனால், தாம் ஏற்கனவே திட்டமிட்டபடி நூலை வெளியிட முடியாது என்று அறிந்த போது, தாம் ஏற்கனவே அனுப்பி வைத்த பிரதிகளை மக்கள் திருப்பி அனுப்பி வைத்தால், தாம் முன்பணமாகப் பெற்ற தொகையை அவர்களுக்கு திருப்பி அனுப்பி விடுவதாக அறிவித்தார்கள். கணிசமான மக்கள் இந்த அறிவிப்பைப் பயன் படுத்திக் கொண்டு தங்கள் பணத்தைத் திரும்பப் பெற்றனர். இந்த அறிவிப்பு மே 1893, 1895, 15-12-1900 எனப் பல முறை வெளியிடப்பட்டது. இந்தப் பணியின் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டும் என அவர்கள் ஒருபோதும் எண்ணியதில்லை. இதன் மூலம் எந்த இலாபமும் சம்பாதிக்க வில்லை என்பது உண்மையாகும்.

மிகப் பிரம்மாண்டமான இந்த நூலை வெளியிடுவதற்காக உதவிகோரி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் தோழர்களை யாரிடமும் கையேந்தி நிற்பதற்கு அனுமதிக்க வில்லை. லூதியாவைச் சேர்ந்த மீர் அப்பாஸ் அலி என்பவருக்கு 1883 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

“இது வானங்களையும், பூமியையும் படைத்த இறைவனின் வேலையாகும். நீங்களோ நானோ உலகை நேசிக்கும் மக்கள் முன் இந்தப் பணிக்காக கையேந்தி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அது இறைவனுக்குச் செய்யப்படும் அவமரியாதையாக அமையும். அவன் மீது நம்பிக்கை வைக்கும் மக்கள் நம்பிக்கையற்றோரின் வாசற் கதவுகளைத் தட்டுவதில்லை. அவர்கள் கைகட்டி நிற்பதில்லை. நீங்கள் இந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள். யாராவது ஒரு பணக்காரரிடம் நீங்கள் ஏதேனும் கூற வேண்டியதிருந்தால் சுருக்கமாக விஷயத்தை மட்டும் கூறுங்கள்; ஒரு முறை மட்டும் அவரிடம் கேளுங்கள். எளிய முஸ்லிம்களை மட்டும் அணுகுங்கள். மற்றவர்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். இந்த விஷயத்தில் சற்றும் தயங்காதீர்கள்.”

இதற்கு ஒரு வருடத்திற்கு முன் அவருக்கு எழுதிய கடித்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

“இறைவனுக்காக மட்டுமே இந்தப் பணி மேற்கொள்ளப் பட்டிருப்பதால், இது நடைபெற வேண்டும் என்று அவன் நாடி இருப்பதால் இலாப நோக்கம் கொண்ட மக்கள் இந்த நூலை வாங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இது வியாபார நோக்கம் கொண்டு செய்யப்படும் பணி இல்லை என்பதால், மார்க்கத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக மட்டும் இதற்கு உதவுவார்கள் என்றால் அது சாலச் சிறந்ததாகவும், அருளுக்குரியதாகவும் அமையும்.”

லூதியானாவிலுள்ள ஷா தீன் என்ற பணக்காரர் ஒருவருக்கு ஒரு பிரதியை அனுப்பி வைக்கும் படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மீர் அப்பாஸ் அலி கேட்டுக் கொண்டார். ஆனால் அந்தப் புத்தகப் பார்ஸல் பிரிக்கப்படாமல், ‘முகவரியாளர் வாங்கப் பிரியப்படவில்லை’ என்ற குறிப்போடு திரும்பி வந்தது. எனவே நூலின் அருமை தெரியாத இது போன்ற அகம்பாவம் கொண்ட மக்களை அணுக வேண்டாம் என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீர் அப்பாஸ் அலிக்கு மீண்டும் கடிதம் எழுதினார்கள்.

அதிலிருந்து இறைவனுடைய வேலைகள் உலகியல் வழிமுறைகளால் கறைபட்டுப் போய்விடக் கூடாது என்பதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எடுத்துக் கொண்ட அக்கறை புலனாகின்றது. அவர்கள் கொண்டிருந்த இறை நம்பிக்கையின் உண்மைக்கும், முழுமைக்கும் ஓர் அளவு கோலாகவும் அமைந்துள்ளது.

இந்த நூல் தொடர்பான இன்னும் ஒரு முக்கியமான சம்பவத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நவாப் சித்தீக் ஹஸன் கான் என்பவர் ஆரம்பத்தில் கன்னோஜ் பிரிவைச் சேர்ந்த ஒரு மவ்லவி ஆக இருந்தார். பின்னர் அவர் போபால் அரச குமாரியைத் திருமணம் செய்ததன் மூலம் நவாப் ஆனார். அவர் ஒரு கற்றறிந்த மனிதராக இருந்த காரணத்தினால் இந்நூலை வாங்கிக் கொள்வதாக வாக்குறுதி அளித்திருந்தார். அந்நூல் வெளியானபோது அதன் முதல் முன்று பாகங்கள் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன, அந்நூலில் அன்றைய ஆட்சியாளர்களின் மார்க்கமான கிறித்தவ மார்க்கத்தின் கொள்கைகள் மறுத்துரைக்கப்பட்டிருந்த காரணத்தால், தாம் அந்நூலை வாங்கியது வெளியே தெரிந்தால் ஆட்சியாளர்களின் கோபத்திற்கு ஆளாகக் கூடும் என்ற அச்சத்தால் அதனைத் திருப்பி அனுப்பி விட்டார். அவர் நூல்கள் அடங்கிய புத்தகக் கட்டைப் பிரித்திருக்கிறார்; படித்திருக்கிறார். ஆனால் மீண்டும் கட்டும் பொழுது மிகவும் கவனக் குறைவாக கட்டி அனுப்பி இருக்கிறார். அதன் காராணமாக நூலின் பல பக்கங்கள் கிழிந்து போயிருந்தன. அந்நூல் அடங்கிய புத்தகக் கட்டு திரும்பி வந்த பொழுது தாமும் அவ்விடத்தில் இருந்ததாக ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் கூறுகிறார். நூல்கள் கிழிந்து போயிருப்பதைக் கண்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முகம் சிவந்து போயிற்று.‘சரி உங்கள் ஆட்சியாளர்களைத் திருப்திப் படுத்துங்கள்’ என்று கூறினார்கள்.

சில மாதங்கள் கழிந்த பின்னர் நவாப் சித்தீக் ஹஸன் கான், ஆட்சியாளர்களின் அதிருப்திக்கு ஆளானார். அவருடைய நவாப் பட்டம் பறிக்கப்பட்டது. இது அவருக்குப் பேரிடியாக அமைந்தது. சித்தீக் ஹஸன் கானின் நிலைமை மிகவும் பரிதாபத்திற் குரியதானது. அவருக்காக துஆச் செய்யும்படி மவ்லவி முஹம்மது ஹுஸைனும், ஹாஃபிஸ் முஹம்மது யூசுஃபும் கேட்டுக் கொண்டனர். அட்சியாளர்களின் கோபத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காகத் தமது வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறியதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவர்மீது கோபம் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே! அற்ப காரணங்களுக்காக நம்பிக்கையை இழப்பது ஒரு பாவமான காரியமாகும். ஆனாலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பழிவாங்கும் எண்ணம் இருந்ததில்லை. எனவே அவர்கள் நவாபின் மீது இரக்கம் கொண்டு அவருக்காக துஆச் செய்தார்கள். அதனால் நவாப் மேலும் அவமானம் அடைவதிலிருந்தும், தண்டனை பெறுவதிலிருந்தும் காப்பாற்றப்பட்டார். அரசாங்கம் அவருக்கு நவாப் பட்டத்தை மீண்டும் வழங்கியது. ஆனாலும் அவர் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. சிறிது காலத்திற்குப் பின் அவர் மரணம் அடைந்தார்.

பராஹீனே அஹ்மதிய்யா என்னும் மிகச் சிறந்த அந்த நூலின் சில சிறப்பம்சங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். அந்நூலின் இரண்டாம் பாகத்தில் ஆரிய சமாஜக் கொள்கையில் காணப்படும் தவறான நம்பிக்கைகள், இறைவெளிப் பாட்டின் தேவை, மற்ற வேதங்களைவிடத் திருக்குர்ஆனுக்குள்ள சிறப்புத் தன்மைகள் ஆகியவற்றைப்பற்றி விவரித்துக் கூறப்பட்டுள்ளது. ஒரு மார்க்கத்தின் கருத்துகளுக்கு ஆதாரமாக அந்த மார்க்கத்தின் வேதங்களிலிருந்தே சான்றுகள் எடுத்து வைக்கப்பட வேண்டும் என்ற கொள்கை உறுதியாகப் பின்பற்றப்பட்டிருந்தது. பிற மார்க்கங்களின் தலைவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படவேண்டும். அதன் மூலம் அம்மார்க்கங்களைப் பின்பற்றுவோரது உணர்வுகள் காயப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையும் பின்பற்றப்பட்டிருந்தது. ஆனால் பொதுவாக ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களாலும், கிறித்தவப் பிரசாரகர்களாலும் இந்தக் கொள்கை பின் பற்றப் படவில்லை!

அதன் மூன்றாம் பாகத்தில் திருக்குர்ஆனின் சிறப்புகள் விரிவாக எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. மனிதனின் முழுமையான வழிகாட்டுதலுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதும் இறைவனால் அருளப்பட்டதுமான நூல் திருக்குர்ஆனே ஆகும் என்று நிரூபிக்கப் பட்டிருந்தது. திருக்குர்ஆனுக்கு எதிராக அடிக்கடி எழுப்பப்படும் பல ஆட்சேபணை களுக்கு அதில் பதில் தரப்பட்டிருந்தது. தாமே இறையறிவிப்புகளைப் பெற்று வருவதாகவும், அதன் உண்மையை நிரூபிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்நூலில் குறிப்பிடுகின்றார்கள். இறைவன் தன்னுடைய கட்டளைகளை வெளிப்படுத்த மேற்கொள்ளும் பல்வேறு வழிமுறைகளைப் பற்றி ஆதாரப்பூர்வமாக எடுத்துரைத் துள்ளார்கள்.

இந்நூலின் நான்காவது பாகத்தில், மொழிகளின் தோற்றம், இறை அற்புதங்களின் தன்மை, அவற்றின் தேவை, எதிர்காலம் பற்றி இறை தூதர்கள் வழங்கும் முன்னறிவிப்புகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்கள். அதன் பின், பௌத்தமதம், கிறித்தவம், ஆரிய சமாஜம் ஆகிய மார்க்கங்களின் கடவுட் கொள்கைகளை எடுத்துரைத்து, அவற்றிலிருந்து இஸ்லாம் எவ்வாறு சிறந்து விளங்குகின்றது என்று எடுத்துக் காட்டுகின்றார்கள். பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளும் விரிவாக அலசப்பட்டுள்ளன. யூதக் கொள்கைகள் திருக்குர்ஆனின் போதனைகளோடு ஒப்பு நோக்கப்பட்டுள்ளன. சுருக்கமாக அனைத்து மார்க்கங்களைவிடவும் எல்லா விதத்திலும் இஸ்லாத்திற்குரிய மேன்மை அழகிய வாதங்களின் மூலம் சிறப்பாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

பிற்காலத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மிகப்பெரும் எதிரியாக விளங்கிய படாலாவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் இந்நூல் வெளிவந்தவுடன், இந்நூலைப்பற்றி விரிவான ஒரு மதிப்புரை எழுதினார். அது அவர் நடத்தி வந்த 'இஷாஅத்துஸ் ஸுன்னா' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. இந்நூலைப் பற்றி சரியான ஒரு மதிப்பீடாக அமையும் அதன் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்:

“தற்காலப் பார்வையில் இந்த நூல் தனித்து விளங்குகிறது என்பது எமது கருத்தாகும். கடந்த காலத்தில் இது போன்ற ஒரு நூல் வெளிவந்ததில்லை. எதிர் காலத்தைப் பற்றி எம்மால் எதுவும் கூறமுடியாது. அது பற்றி இறைவன் மட்டுமே நன்கறிவான்; தம் உடலாலும், ஆற்றலாலும், பேனாவாலும், நவாலும், இன்னும் எத்தனை வகையான செயல்பாடுகள் உள்ளனவோ அவையனைத் தாலும் இஸ்லாத்திற்காகத் தொண்டாற்றுவதில் அந்நூலாசிரியருக்குள்ள விடா முயற்சி முஸ்லிம்களிடம் இதுவரை காணப்படாத ஒன்றாகும், இதனை ஆசியப்பகுதி மக்களிடம் பொதுவாகக் காணப்படும் மிகைப்படுத்திக் கூறும் பண்பின் வெளிப்பாடாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இது போன்ற ஒரு நூல் இருந்தால் கொண்டுவந்து காட்டும் படி நாம் சவால் விடுக்கிறோம்.”

(தொடரும்)

தமிழில்:
S.S.H. **முஹம்மது லெப்பை**

# கேள்வி – பதில்

**ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்)**

**நான்காவது கலீஃபத்துல் மஸீஹ்**

**கேள்வி 1 :** ஜின் நெருப்பினால் படைக்கப் பட்டுள்ளது என்று கூறப்படுவதன் பொருள் யாது?

**பதில் :** ஜின் என்பது பாக்டீரியாவைக் குறிக்கும். மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னரே ஜின் படைக்கப்பட்டது. இந்த வகை பாக்டீரியாவிற்கு பைரோபாக்டீரியா என்று பெயர். இது மனிதனைப் போன்று நீர்கலந்த மண்ணிலிருந்து படைக்கப்பட்டதல்ல. மாறாக நேரடியாக நெருப்பிலிருந்து படைக்கப்பட்டதாகும்.

ஜின் என்னும் சொல் கட்டுப்படாமல், கிளர்ச்சி செய்பவர்களையும் குறிக்கும். ஹஸ்ரத் ஸுலைமான் (அலை) மற்றும் ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்த மலைவாழ் மக்கள் கட்டுப்படாதவர்களாகவும் கிளர்ச்சி செய்பவர்களாகவும் இருந்தனர்.

ஜின் என்பது ஏகாதிபத்திய மக்களையும் குறிக்கும்.

ஜின் என்பது அநாகரிகமான மக்களை விட்டும் தம்மை மறைத்துக் கொள்ளும் கண்ணியமிக்க பெண்களையும் குறிக்கும்.

**கேள்வி 2 :** தப்லீகின் போது அல்லாஹ் வின் தண்டனை குறித்து பிறரிடம் சவால் விடலாமா?

**பதில் :** அல்லாஹ்விடமிருந்து அறிவிப்பு வராத வரை நீங்கள் அந்த சவாலை விடுக்கவே முடியாது. அதை நீங்கள் செய்யக் கூடாது. தண்டனை அல்லாஹ்வின் கையில் உள்ளது. நீங்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகிவிடக்கூடும் என்று ஒருவரை எச்சரிக்கலாம். ஆனால் அல்லாஹ்விடமிருந்து அறிவிப்பு ஏதும் வராத நிலையில் அவர் தண்டிக்கப்படுவார் என அவரிடம் சவால் விடக்கூடாது.

**கேள்வி 3 :** இந்த பிரபஞ்சத்தில் (பூமியைத் தவிர) வேற்று கிரகங்களில் உயிரினங்கள் உள்ளனவா? அவர்களுக்கும் நபிமார்கள் அனுப்பப்பட்டுள்ளனரா?

**பதில் :** ஆம். (இந்த பிரபஞ்சத்தின்) மற்ற இடங்களிலும் உயிரினம் உள்ளது. அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டலும் அவர்களுக்கு கிடைத்திருக்கும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்ற நபிமார்கள் அங்கு தோன்றினரா என்பது நமக்குத் தெரியாது. அவர்கள் எவ்வகையான மொழிகளைப் பேசுகின்றனர் என்பதும் நமக்குத் தெரியாது. அவர்கள் தமது தேவைக்கேற்ப நபிமார்களைப் பெற்றிருப்பர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தி நமக்குரியதாகும். அவர்களுக்கு தனியான தூது செய்தி கொடுக்கப்படலாம். மரணத்திற்குப் பின்னர் நாம் அதைப் பற்றி அறியலாம்.

**கேள்வி 4 :** சூஃபியிஸத்தைப் பற்றி தாங்கள் கருதுவது என்ன?

**பதில் :** உண்மையான இல்ம் (அறிவு) மற்றும் சூஃபியிஸம் ஆகிய இரண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இணைபிரியாமல் இருந்தன. விஷயங்களின் ஆழத்தை அறிந்து கொண்ட மிகப்பெரிய சூஃபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில், உண்மையான சூஃபியிஸம், வெளிப்படை யான செயல்களுடன் (கடமையாக்கப்பட்ட தொழுகைகள் போன்றவற்றுடன்) சேர்ந்தே இருந்தது. பின்னர் அவ்விரண்டும் பிரிய ஆரம்பித்தன. சூஃபிகள் கடமையாக்கப்பட்ட தொழுகைகளை கைவிட்டவாறு திக்ரே இலாஹியில் (இறை தியானம்) ஈடுபட்டனர். அதன் பிறகு ஆன்மீகத்திற்கு இசை வலு சேர்ப்பதாக சூஃபிக்கள் எண்ணினர். பிறகு பரவச நிலையை அடைதல், கவாலி போன்றவை பின்னர் தோன்றின. இவற்றால் எந்த பயனுமில்லை. (ஒரு ஆன்மீக பயிற்சி என

நினைத்துக் கொண்டு) கவாலியை கேட்பவர்கள், (தமது பண்பில்) எந்த ஒரு மாற்றத்தையும் காணாமல்தான் திரும்பிச் செல்கின்றனர்.

**கேள்வி 5 :** பொதுவாக தம்பதிகள் தமது முதலாவது குழந்தையைப் பெற்றுக் கொள்வதில் காலம் தாழ்த்துகின்றனர். இது சரியானதா?

**பதில் :** முதலாவது குழந்தையைப் பெற்றுக் கொள்வதை வேண்டுமென்றே இரண்டு, மூன்று அல்லது நான்கு வருடங்கள் தள்ளிப் போடுவதன் விளைவாக பின்னர் தாய்மையடைவதில் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. முதலாவது குழந்தையை முடிந்தவரையில் சீக்கிரமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இளம் தம்பதியினருக்கு நான் தரும் அறிவுரை ஆகும். பின்னர் அவர்கள் குழந்தைகளுக்கிடையே நீண்ட இடைவெளி விட்டுக் கொள்ளலாம்.

**கேள்வி 6 :** எந்த சிகிச்சை முறை மிகச் சிறந்தது ? ஹோமியோபதி, அலோபதி மற்றும் மூலிகை மருத்துவ முறை ஆகிய மூன்றையும் நாம் பயன்படுத்தலாமா?

**பதில் :** ஹோமியோபதி மிகச் சிறந்ததாகும். ஹோமியோபதி மருத்துவ முறை இறை இருப்புடன் தொடர்பு கொண்டதாகும். நீர்மமாக்கப்படுவதன் மூலம் (dilution) குறைக்கப்படுகின்ற வீரியத்தின் (potency) அளவு எந்த அளவுக்கு அதிகமாக உள்ளது எனில், அந்த எண்ணிக்கை, உலகிலுள்ள அணுக்களின் எண்ணிக்கையை விட அதிகமானதாகும். (இதற்கு உதரணம் என்னவெனில்) உலகின் ஒரு மூலையில் ஒரு துளி மருந்தையிட்டு, நன்கு கலக்கி உலகின் மறு முனையில் ஒரு மூலையில் அந்த கரைசலிலிருந்து ஒரு துளியை எடுப்பது போன்றதாகும். இந்த துளியில் மருந்து சிறிதளவாவது எஞ்சியிருக்க முடியுமா?

(மற்றொரு உதாரணம்) அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு துளி மருந்தினையிட்டு, அக்கடலின் மறுமுனையிலிருந்து ஒரு துளியை எடுத்தால், அதில் (மருந்து) எதுவும் எஞ்சியிருக்காது. ஹோமியோபதியில் (பயன்படுத்தப்படும்) 200 வீரியம், 1000 வீரியம், 1 லட்சம் வீரியம் எல்லாம் நம்பமுடியாத விந்தையாகும். (எந்த அளவுக்கு நீர்மமாக்கப்படுகிறது எனில், மூல மருந்தில் சிறிதளவும் அதில் எஞ்சியிருப்பதில்லை.) எனவே அல்லாஹ் மனித ஜீன்களில் ஒரு உள்ளுறை எதிர்விளைவை (inbred reaction) படைத்திருக்காவிட்டால் ஹோமியோபதி மருந்து எந்த வேலையும் செய்ய முடியாது. இவ்வாறு ஹோமியோபதி இறை இருப்பிற்கு சான்றாக விளங்குவதால் நான் அதனை நேசிக்கிறேன். ஹோமியோபதி மருந்துகளை, நான் குறிப்பிட்ட அதிக அளவு வீரியங்களில் அம்மருத்துவத்தை நன்கு கற்றறியாமல் பயன் படுத்துவதனால் மிகப் பயங்கர எதிர்விளைவுகள் தோன்றுகின்றன. சிலிசியாவை (silicia) அதிக அளவு வீரியத்தில் பயன்படுத்துகின்ற ஒரு அரைவேக்காட்டு ஹோமியோபதி மருத்துவர் கூரிய ஆயுதங்களை கையில் வைத்துள்ள ஒரு காட்டுமிராண்டியை விட அபாயகரமானவர் ஆவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலேயே ஹோமியோபதி மருத்துவ முறை இருந்துள்ளது. தேன் குணமளிப்பதும் இந்த முறையிலேயே ஆகும். சூரா அல்-நஹ்லில் இது குறிப்பிடப்பட் டுள்ளது. தேனீ ஒவ்வொரு மலரிலிருந்தும் தேன் தயாரிப்பதற்காக உறிஞ்சுகிறது. ஒரு முறை கடுமையான வயிற்று வலியால் கஷ்டப்பட்ட ஒரு சஹாபிக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தேன் கொடுத்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. ‘உமது வயிறுதான் பொய் கூறுகிறது; தேன் பொய் கூறாது’ என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (பின்னர் தேன் மூலமாகவே அந்த சஹாபி குணமடைந்தார்).

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஹோமியோபதி இல்லை எனக் கூற முடியாது. (மாறாக) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வஹியின் மூலமாகவே அது வெளிப்படுத்தப்பட்டது.

தொகுப்பு : **ஷிராஸ் அஹ்மது**

தமிழில்: **A. நாஸிர் அஹ்மது**

தொடர் : 2

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு கிடைத்த உலகாளாவிய வெற்றிகள்

(இலண்டன் ஆண்டு மாநாட்டின் போது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் - ஆசிரியர்)

Review of Religion வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்று கடந்த வருடம் நான் கூறியிருந்தேன். அப்போது இதை வாங்குபவர்களின் எண்ணிக்கை 1240 ஆக இருந்தது. ஆனால் இப்போது இந்த மாநாடு வரை இதை வாங்குபவர்களின் எண்ணிக்கை 8,000 பேர்களாக அதிகரித்துள்ளது. எனவே இவ்வருடம் மட்டும் 6,760 பேர் அதிகமாக இதில் சேர்ந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாகும். குறைந்தபட்சம் இதன் எண்ணிக்கை 10,000 ஆக இருக்க வேண்டும்.

பிரசுரங்கள் வெளியிடுவதில் இந்த நாடுகள் முன்னணியில் உள்ளன. கனடா 1 மில்லியன் பிரசுரங்களை விநியோகித்துள்ளது. Electric Bill Board களையும் இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். 85 மில்லியன் நபர்களை விட அதிகமான எண்ணிக்கையில் மக்களுக்கு தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது. ஜெர்மனி 1.6 மில்லியன் பிரசுரங்கள் விநியோகம் செய்து 8 மில்லியனுக்கு அதிகமான நபர்களுக்கு தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனி சுற்றுப்பயணத்தில் நான் பார்த்தேன். அஹ்மதிய்யத்தின் அறிமுகம் அங்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. U.K ஜமாஅத் 1.5 மில்லியன் பிரசுரங்களை விநியோகம் செய்துள்ளது. சுவீடன் 3 இலட்சத்து 20 ஆயிரம் பிரசுரங்களை விநியோகம் செய்து 2 மில்லியன் நபர்களுக்கு தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது. டிரினிடேடில் 5 இலட்சம் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. நார்வேயில் 2 இலட்சம் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு 3 இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது. பெல்ஜியம் 4 இலட்சம் பிரசுரங்களும் ஹாலந்தில் நாலரை இலட்சம் பிரசுரங்களும் ஸ்பெயினில் ஒரு இலட்சத்தி 14 ஆயிரம் பிரசுரங்கள், **இந்தியாவில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பிரசுரங்கள்,** ஆப்பிரிக்காவில் நைஜீரியா 1 இலட்சம் பிரசுரங்களும், தன்ஸானியா 1 இலட்சம் பிரசுரங்களும், கென்யா 71,000 பிரசுரங்களும் பெனின் 60,000 பிரசுரங்களும் விநியோகம் செய்துள்ளது.

**பிரசுரங்கள் விநியோகம் செய்யப்படும் போது நடைபெற்ற சில சம்பவங்கள்**

ஒரு பாதிரிக்கு பிரசுரம் கிடைத்ததும் அவர் கூறினார்: கிறித்தவர்களும் நீங்கள் செய்வது போன்று இந்த அளவு முயற்சிகளை செய்திருந்தால் ஒருபோதும் அவர்களுக்கு தோல்வி ஏற்பட்டிருக்காது.

ஜெர்மனியைச் சேர்ந்த ஒருவர் கூறினார்: எனது கருத்தின்படி நீங்கள் 10 அல்லது 14 வருடங்களில் ஜெர்மனியில் மிகைத்து நிற்பீர்கள். நான் அஹ்மதிகளை அறிவேன். மற்ற துருக்கி முஸ்லிம்களிலிருந்து இவர்கள் முற்றிலும் வேறுபட்டவர்கள் ஆவர் என்று கூறினார்.

ஒருவருக்கு துண்டுப் பிரசுரம் கொடுக்கப்பட்ட போது நம்மைப் பார்த்து நீங்கள் தீவிரவாதிகள் என்று கூறினார். அவரிடம் விரிவாகப் பேசிய பிறகு அவர் இறுதியில் கூறினார்: அஹ்மதிகள் உண்மையைக் கூறுகின்றார்கள் என்றால் இஸ்லாத்திற்கு அமைதி, சாந்தி என்பதைத் தவிர வேறு எந்த பொருளும் இருக்க முடியாது.

ஜெர்மனியில் ஒரு பாதிரி நமது பிரசுரத்தைக் கவனமாகப் படித்தார். இதன் ஒவ்வொரு சொல்லிலும் உள்ள தூதுச் செய்தி மிகவும் சிறப்பாக இருக்கின்றது. ஏனைய முஸ்லிம்களும் இதைக்கேட்டு அதற்கேற்ப செயல்படுவார்கள் என்று நாம் நம்புகின்றேன் என்று அவர் கூறியுள்ளார்.

**ஜெர்மனியிலுள்ள நமது கொள்கை பரப்புநர் எழுதுகின்றார்:**

எங்களது உள்ளூர் தலைமையகம் சார்பாக பேருந்துகளில் சுவரொட்டிகளை ஒட்டி அதில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி தெரிவிக்கப்பட்டது. நகரத்திலுள்ள மக்கள் தொகை 2 இலட்சத்து 70

ஆயிரத்தை விட அதிகமாகும். மக்கள் குடிபெயர்ந்துள்ள எல்லா இடங்களிலும் தூதுச்செய்தி பிரசுரங்கள் மூலம் எட்ட வைக்கப்பட்டுள்ளது. பேருந்துகளில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அது ஒரு வாரம் வரை அவற்றில் இருக்க வேண்டியதிருந்தது. ஆனால் மக்கள் அந்த சுவரொட்டிகளை எந்த அளவு விரும்பினார்கள் என்றால் இந்த தூதுச் செய்தியை அவர்கள் எந்த அளவு பாராட்டினார்கள் என்றால் எவ்வித கூலியையும் பெறாமல் அரசு அதிகாரிகள் ஒரு மாதம் வரை அவை பேருந்தில் ஒட்டப்பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஒரு ஜெர்மன் நண்பர் 2,000 பிரசுரங்கள் தனது செலவில் வெளியிட்டு அதை தானே விநியோகிப்பதாகக் கூறினார்.

**அமெரிக்காவிலுள்ள நமது கொள்கை பரப்புநர் நஸீம் மஹ்தி சாஹிப் எழுதுகின்றார்:**

நியூயார்க்கில் Press Conference நடந்த போது நியூயார்க் டைம்ஸின் ஒரு மூத்த பத்திரிகையான சேமோயல் பீரிடுமேன் அவர்களின் தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் ஒரு புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் Journalism in Professor ஆக இருந்தார். அவர் நீங்கள் வீடு வீடாக சென்று அஹ்மதியத்தின் தூதுச் செய்தியைப் பிரசுரங்களின் வடிவில் விநியோகிப்பது பற்றி நான் கேள்விப்பட்டேன். உங்களது ஏதாவது ஒரு குழுவுடன் இந்த பிரசுரங்களை விநியோகிப்பதற்காக உங்களுடன் எனது செலவில் நானும் இப்பணியில் ஈடுபட விரும்புகின்றேன். மக்களது எதிர்வடிக்கையை யும் அவர்களது கருத்துக்களையும் அறிந்து ஒரு column எழுத எண்ணியுள்ளேன் எனக் கூறினார். மால்வாகி என்ற நகரில் அஹ்மதிகளின் ஒரு குழுவுடன் பிரசுரங்களை விநியோகிப்பதற்காக இவர் அனுப்பப்பட்டார். இதுபற்றி இவர் ஒரு column எழுதினார். அதன் விளைவாக சிகாகோ மற்றும் சேன்பிரான்சிஸ்கோ வின் புகழ்பெற்ற பத்திரிகைகள் நடத்தும் பத்திரிகையாளர்களும் இந்த குழுவில் தங்களை இணைத்துக் கொள்ள ஆசைப்பட்டனர். சில நாள் கழிந்த பிறகு மியாமுத்தீன் என்ற அமெரிக்காவின் மிகப்பெரிய Spanish TV Network இவருடன் தொடர்பு கொண்டதாக இவர் கூறுகிறார். அவர்கள் தங்களுடைய ரிப்போர்ட்டை உங்களுடன் அனுப்பி வைத்து அஹ்மதிய்யத் தொடர்பான ஒரு டாக்குமென்டரி தயார் செய்ய உள்ளோம் என்று அவரிடம் கூறியுள்ளனர். பிறகு அவர் தனது ரிப்போர்ட்டரையும் கேமராவுடன் லாஸ் ஏஞ்சல்ஸிற்கு அனுப்பி வைத்தார். இந்த ரிப்போர்ட்டர் ஒரு பெண்ணாக இருந்தார். எனவே (பெண்கள் அமைப்பான) லஜ்னாவின் ஒரு குழுவுடன் இவரை அனுப்பி வைக்க நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டன. செல்வதற்கு முன் இந்த பெண் ரிப்போர்ட்டர் எனது புர்கா எங்கே? என்று கேட்டார். பிறகு அவருக்கு புர்கா அணிவிக்கப்பட்டது. பிறகு அந்தப் பெண் ரிப்போர்ட்டர் எங்களுடன் இருந்தவாறு டாக்குமென்டரி தயார் செய்தார். அது இந்த Spanish TV –ல் காட்டப்பட்டது. அமெரிக்காவில் இதனை 6 மில்லியன் மக்கள் பார்த்துள்ளனர். எவ்வாறிருப்பினும் அஹ்மதிய்யத் தின் உண்மையான தூதுச் செய்தி 6 மில்லியன் மக்களை சென்றடைந்தது. மெக்ஸிகோவிலும் அமெரிக்காவின் ஏனைய பகுதிகளிலும் பல மில்லியன் மக்கள் இதனைக் கண்டார்கள்.

பிராங்ஃபோர்டில் ஓர் இளைஞர் பிரசுரங்களை விநியோகித்து வந்தார். சில முஸ்லிம் நாடுகளில் கிறித்தவர்களுக்கு எதிராக நடந்து வரும் கொடுமைகளுக்கு எதிராக ஓர் ஊர்வலம் அப்போது வந்தது. முஸ்லிம்களுக்கு எதிராக அவர்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். இந்த சமயத்தில் நமது இளைஞரும் இங்கு பிரசுரங்களை விநியோகம் செய்தார். சில கிறித்தவர்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்திக் காட்டினர். எதுவரையென்றால் காவல்துறை யினரை வரவழைத்தனர். அந்த இளைஞர் காவல்துறையினரிடம் நான் நாட்டின் சட்டத்திற்கு ஏற்பவே பிரசுரங்களை வழங்குகின்றேன். இந்த மக்கள் இங்கு வெறுப்பை பரப்புகின்றார்கள். நானோ அன்பின் தூதுச் செய்தியைத் தான் வழங்கியுள்ளேன் என்று கூறினார். இதைக் கேட்ட காவல்துறையினர் அந்த பிரசுரங்களைப் பார்த்து விட்டு அந்த இளைஞரிடம் நாங்கள் இங்கேயே நிற்கின்றோம். எங்களது கண்காணிப்பில் நீங்கள் இந்த பிரசுரங்களை விநியோகம் செய்யுங்கள். யாரும் உங்களைத் தடுக்க முடியாது என்று கூறினார்.

**ஜெர்மனியிலிருந்து ஒருவர் எழுதியுள்ளார்:**

துண்டுப் பிரசுரத்தில் ஹுஸூர் அவர்களின் புகைப்படத்தைப் பார்த்த ஒரு ஆப்பிரிக்கர் நான்

இவரது குத்பாக்களை தொடர்ந்து கேட்டு வருகின்றேன். இவரைச் சந்திக்க விரும்புகின்றேன் என்றும் கூறினார். இவருக்கு ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்தது. ஜெர்மனியின் ருஹ்ஸர் என்ற இடத்தில் இளைஞர்கள், சிறுவர்கள் பிரசுரங்கள் விநியோகம் செய்வதைக் கண்ட ஒரு பெண்மணி இந்த வழிமுறை எனக்கு பிடித்துள்ளது என்று கூறி தனது செலவில் இவர்கள் அனைவருக்கும் ஜூஸ் வாங்கிக் கொடுத்தார். இது என் சார்பாக உள்ள சிறிய அன்பளிப்பு என்றும் கூறினார்.

**அமெரிக்காவிள்ள நமது கொள்கை பரப்புநர் எழுதுகின்றார்**

முழு இரவும் ஒரு இளைஞர் தனது பணியை முடித்து விட்டு பிரசுரம் கொடுக்க வந்த போது பிரசுரம் கொடுப்பது முடிந்து விட்டது. அவர் கூறுகிறார். எனக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டது. அவரது உள்ளத்தில் இந்த எல்லா பிரசுரங்களையும் நான் விநியோகம் செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற ஆசை ஏற்பட்டது. அவர் தரூது ஓத ஆரம்பித்தார். அப்போது ஒரு கருப்பு அமெரிக்கவர் அங்கு வந்தார். ஒரு பிரசுரத்தை கேட்டார். கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் வந்து 5, 6 பிரசுரம் தேவை என்று கூறினார். 15 நிமிடங்களுக்குப் பிறகு அவர் மீண்டும் வந்து இந்த எல்லா பிரசுரங்களையும் நீங்கள் எனக்கு தர முடியுமா? என்று கேட்டார். இதற்கான காரணத்தை அவரிடம் கேட்ட போது அவர் நான் ஒரு கடை வைத்திருக்கின்றேன் என்றும் இந்தப் பிரசுரங்கள் எனக்கு மிகவும் பிடித்துள்ளன. இவற்றை நான் எனது கடையில் வைத்து விநியோகம் செய்வேன் என்றும் கூறினார். இவ்வாறு அல்லாஹ் தப்லீகிற்குரிய வழிகளைத் திறந்து தருகின்றான்.

**அப்துல் வஹ்ஹாப் ஆதம் காஸிப் கானாவிலிருந்து எழுதுகின்றார்கள்:**

அஹ்மதிய்யா ஜமாஅத் தரப்பிலிருந்தும் நாட்டின் இரு பெரும் நகரங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படமுள்ள இரண்டு Bill Board கள் வைக்கப்பட்டன. இவற்றில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அழகிய புகைப்படம் மாட்டப்பட்டிருந்தது. அதன் கீழ் நீண்ட காலமாக நாம் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக காத்திருந்தோமோ அவர் தோன்றிவிட்டார் என எழுதப்பட்டிருந்தது. இந்த இரண்டு இடங்களிலும் இந்த புகைப்படங்கள் மக்களின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்ததுடன் காலத்தின் மஸீஹ் தோன்றிய செய்தியையும் அவர்களுக்கு தெரிவிக்கக்கூடியதாக அமைந்தது.

இவ்வாறு செய்வதற்குரிய காரணம் அங்குள்ள பாதிரிகள் மஸீஹ் வானத்திலிருந்து இறங்கவுள்ளார். அவருக்காக காத்திருங்கள். அந்த நேரம் இப்போது வந்துவிட்டது என அறிவிப்பு செய்திருந்தனர். அதற்கு பதில்கூறும் முகமாக நீங்கள் அவருக்காக காத்திருக்க வேண்டாம். அவர் 100 வருடங்களுக்கு முன்பே தோன்றிவிட்டார் என்று பதில் வைக்கப்பட்டது. மேலும் Love for All Hatred for None.org என்ற இணையதளம் இயங்கி வருகிறது. 30,000 -ற்கும் மேற்பட்ட மக்கள் இந்த இணையதளத்தை பார்த்துள்ளனர். 450 தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. பத்திரிகைகளில் செய்திகளும் வந்துள்ளன.

உலகலாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக 2069 திருக்குர்ஆன் கண்காட்சிகள் உலகம் முழுவதும் நடந்துள்ளது. 30,41,889 பேர் வரை இதன் மூலம் இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டவைக்கப்பட்டது. 5096 புக் ஸ்டால்கள் மூலமாகவும், 91 Book Fair-களில் பங்கு பெற்றதன் மூலமாகவும் 21,54,000 க்கும் அதிகமான நபர்களுக்கு தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டது.

திருக்குர்ஆன் மொழியாக்கம் வைக்கப்பட்டுள்ள கண்காட்சிகளில் வந்த கிறித்துவ அறிஞர் ஒருவர் மீடியாக்கள் மூலம் பள்ளிவாசலில் மக்களை கொல்வது இஸ்லாம் கூறும் வழிமுறை அல்ல என்பதை கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கு எடுத்துக் கூறுங்கள். உண்மை என்னவென்றால் நாட்டின் அமைதி தொடர்பாக நாங்களும் நீங்கள் வைத்துள்ள அதே கொள்கை உடையவர்களாகத் தான் இருக்கின்றோம் என்று கூறினார்.

2011-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் தேதி டோக்கியோவில் International Book Fair நடந்த சமயத்தில் சவூதி அரேபியாவின் தூதுவர் ஜமாஅத்தின் ஸ்டாலுக்கு வந்தார். திருக்குர்ஆன் மொழியாக்கம் தொடர்பாக ஜமாஅத்தின் பணிகளைப் பாராட்டினார். அரபி மொழியில் இருக்கும் ஜமாஅத் நூல்கள் தொடர்பாக அவர் கேட்டறிந்தார். அப்போது தக்வா என்ற அரபு பத்திகையின் ஒரு பிரதி தற்செயலாக அங்கு

இருந்தது. அவர் அந்தப் பத்திரிகையைத் திறந்து பார்த்தார். அவர் முதலில் கண்ட பக்கத்தில் இலண்டனிலிருந்து ஃபஸ்ல் பள்ளிவாசல் திறக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வெளியிடப்பட்ட ஃபைஸல் மன்னரின் புகைப்படமும் அரபு மக்களுக்காக அஹ்மதிய்யா ஜமாஅத் செய்த தொண்டுகள் பற்றிய குறிப்பும் இருந்தது. அந்தத் தூதுவர் மிகுந்த ஆர்வத்துடன் அந்த கட்டுரையைப் படிக்க ஆரம்பித்தார். ஜமாஅத்தின் அறிமுகத்தை பெறுவதற்காக அவர் ஸ்டாலில் அமர்ந்தார். அந்த சமயத்தில் அவருக்கு மற்ற நூல்களும் கொடுக்கப்பட்டன.

ஜப்பானின் முபல்லிக் எழுதுகிறார்: எகிப்தைச் சார்ந்த டாக்டராக இருக்கக் கூடிய நண்பர் ஒருவர் Book Fair -க்கு வந்திருந்தார். அவர் M.T.A -வைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தொடர்ச்சியாக M.T.A -வைப் பார்த்து வருவதாகக் கூறினார். இந்த வருடம் என்னைப் பார்த்ததும் அவர் ஓடி வந்து மிகவும் ஆர்வத்துடன் என்னை சந்தித்தார். எனக்கு நன்றி தெரிவித்தவாறு அவர் கூறினார்:

ஒரு முறை M.T.A பார்த்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய ஒரு குத்பாவை நான் கேட்டேன். அதில் அவர் அரபு நாடு மற்றும் எகிப்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி கூறினார்கள். அரபு ஆட்சியாளர்களுக்கு அவர்களது தவற்றைச் சுட்டிக் காட்டி கூறப்பட்ட கருத்துகளுக்கு நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இஸ்லாமிய உலகில் அரபு ஆட்சியாளர்களுக்கு மிக சிறந்த வழிகாட்டலைத் தந்த ஒரே மார்க்கத் தலைவராக இவர்கள்தான் இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

கர்நாடகாவின் தென்மண்டல அமீர் சாஹிப் எழுதுகின்றார்: பெங்களூரு நகரில் நடந்த Book Fair-ல் ஜமாஅத் தரப்பிலிருந்து 3 புக் ஸ்டால்கள் வைக்கப்பட்டன. எனது சுற்றுப்பயணங்கள் அடங்கிய CD-ம் அங்கு காட்டப்பட்டது. வருகின்ற போகின்ற ஒவ்வொருவரும் அதைப் பார்த்தார்கள். இந்தக் காட்சிகளைப் பார்த்து கத்மே நுபுவ்வத் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்தவர்களுக்கு அதனை தாங்கிக் கொள்ள முடியவில்லை. காவல்துறை மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து அவர்கள் எங்களது ஸ்டாலை மூடும்படி செய்தார்கள். ஜமாஅத்தின் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக சந்தித்து நமது கொள்கைகள் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்ட போது, அவர்களுக்கு நமது ஜமாஅத்தின் நூல்களையும் கொடுத்த போது அந்த அதிகாரிகள் எங்களிடம் இந்த மவ்லவிகள் தரப்பிலிருந்து உங்கள் ஜமாஅத் தொடர்பாக தவறான தகவல்கள் தரப்பட்டன. அதனால் தான் இந்த ஸ்டாலை மூடும்படி நாம் கட்டளையிட்டோம் என்று கூறினார்கள். பிறகு ஸ்டால் திறப்பதற்குரிய அனுமதியை வழங்கியது மட்டுமின்றி அந்த ஸ்டாலில் இரண்டு காவலர்களை பாதுகாப்பிற்காக டியூட்டியிலும் அமர்த்தினார்கள். அல்லாஹ்வின் அருளால் இதற்கு பிறகு மக்கள் அதிகமாக நமது ஸ்டாலுக்கு வந்தார்கள். 10 நாட்கள் வரை ஸ்டால் அங்கு இருந்தது. 80,000க்கும் அதிகமான மக்கள் இந்த ஸ்டாலிலிருந்தும் ஜமாஅத் நூல்களைப் பெற்றுச் சென்றனர். 53,000 ரூபாய்க்கு நூல்கள் விற்பனையாயின.

இங்கிலாந்து ஜமாஅத்தின் கண்காணிப்பில் இப்போது ரகீம் அச்சகம் இயங்கி வருகிறது. அது ஆப்பிரிக்காவிலுள்ள 8 நாடுகளில் அதாவது கானா, நைஜீரியா, தன்ஸானியா, செராலியோன், ஐவரிகோஸ்ட், கென்யா, கேம்பியா, புர்கினோஃபாஸோ ஆகிய நாடுகளில் இந்த அச்சகம் தமது பணிகளைச் செய்து வருகிறது. இலண்டன் ரகீம் அச்சகத்திலிருந்து அச்சிடப்பட்டு இவ்வருடம் வெளியிடப்படும் நூல்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 15 ஆயிரத்து 341 ஆகும். அல் ஃபஸ்ல் இன்டர்நே-னல் பத்திரிகையும் இங்கிருந்து தான் வெளி வருகிறது. ஆப்பிரிக்க நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு நூல்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 3 ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கின்றது. கானாவில் புதிய அச்சகமும் புதிய மெஷினும் உள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் நூல்களைத் தவிர பல சமுதாயங்களின் பத்திரிகைகளும் இங்கிருந்து வெளியிடப்படுகின்றன.

பங்ளா டெஸ்க்கும் பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளது. தாவத்துல் அமீர் என்ற நூலின் ரிவியூ பணிகள் முடிவுற்றன. ஸப்ஸ் இஷ்திஹார் (பச்சைப் பிரசுரம்) என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலின் மொழியாக்கம் நடந்து வருகிறது. M.T.A. வில் 48 மணி நேரம் பங்ளாவின் நேரலையான சுதார் சன்டே நிகழ்ச்சி காட்டப்படுகிறது. நேரலை

குத்பாக்கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றின் மொழியாக்கம் நடக்கின்றது.

சைனீஸ் டெஸ்க் மூலம் திருக்குர்ஆனின் சீன மொழியாக்கத்தின் இரண்டாவது பதிப்பு வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பதிப்பு வெளி வருவதற்கு முன்பாக இருமுறை இது சரிபார்க்கப்பட்டுள்ளது. இப்போது இந்தப் பணி நிறைவு பெற்று இந்தப் பிரதி ரப்வா அனுப்பப்பட்டுள்ளது. துர்கிஸ் டெஸ்க் மூலம் பரகாத்துத் துஆ, சதகாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ரஷ்யன் டெஸ்க் மூலம் குத்பாக்களின் நேரலை மொழியாக்கம் ரஷ்ய மொழியில் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் முதலில் குத்பாவை Translive செய்து மொழிபெயர்ப்பதில் நேரம் அதிகமாக செலவானது. இப்போது இது தவிர்க்கப்பட்டு உடனடி மொழியாக்கம் செய்யப்படுகிறது. கிலாஃபத் ஜுப்ளியில் நிகழ்த்தப்பட்ட உரைகளையும் ரஷ்ய மொழியில் இவர்கள் வெளியிட்டுள்ளனர்.

**புஹாராவைச் சேர்ந்த சுவின் ஜேமிலோ சாஹிப் எழுதுகின்றார்:**

இரண்டு வருடங்களுக்கு முன் எனது உள்ளத்தில் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தொடர்பாக பல கேள்விகள் எழுந்தன. நான் திருக்குர்ஆனையும் ஹதீஸ் நூல்களையும் படித்திருந்தேன். பல்வேறு பள்ளிவாசல்களுக்கு சென்று ஆலிம்களிடம் இது பற்றி கேள்வி கேட்டேன். ஆனால் எவருமே எனக்கு திருப்தி அளிக்கக்கூடிய பதிலைத் தரவில்லை. எனக்கு சரியான திருப்திகரமான பதில் கிடைக்காததால் எங்களுக்கிடையில் விவாதம் ஆரம்பித்து விடும். நான் அவர்களிடம் நாம் இவ்வாறு விவாதம் செய்கின்றோம். ஆனால், நமக்கிடையில் தீர்ப்பு வழங்குகின்ற எவரும் இல்லை. கிறித்தவர்களிடம் போப் இருக்கின்றார். அவர் அவர்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கக்கூடிவராக இருக்கின்றார். நமது மார்க்கம் சரியான வழிகாட்டல் வழங்கும் என்று வாதம் புரிகின்ற நமக்கு இந்தக் காலத்தில் எந்த இமாமும் இல்லை. கலீஃபாவும் இல்லை. இதைக் கேட்டு அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்து விடுவார்கள். இந்தக் காலகட்டத்தில் தனது சொந்த முயற்சியில் அரபு மொழியைக் கற்ற எனது நண்பரான புர்கான் சாஹிப் தனது அரபி புலமையை வளர்த்துக் கொள்வதற்காக பல சேனல்களை தேடிக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் அவருக்கு M.T.A. அல் அரபிய்யா சேனல் கிடைத்தது. அதில் அல்ஹிவாருல் முபாஸிர் என்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. எனக்கு அரபி தெரியாது. ஆனால் எனது நண்பரான புர்கான் சாஹிபிற்கு அரபி தெரியும். அவர் எல்லா நிகழ்ச்சிகளையும் மொழியாக்கம் செய்து எனக்கு கூறிக் கொண்டிருந்தார். இதன் விளைவாக எனது உள்ளத்தில் இருந்த எல்லா கேள்விகளுக்கும் ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில் திருப்திகரமான பதில்கள் கிடைத்தன. நானும் புர்கான் சாஹிபும் தொடர்ச்சியாக இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆரம்பித்தோம். இதற்குப் பிறகு இன்டர்நெட்டிலும் நான் தகவல்களைப் பெற்றேன். ஆரம்ப நாட்களில் ஜமாஅத்திற்கு எதிராக பல சந்தேகங்கள் என் உள்ளத்தில் இருந்தன. ஆனால் பிறகு alislam.org கிடைத்தது. அதிலிருந்து ஜமாஅத் நூல்களைப் படித்த பிறகு இந்த ஜமாஅத் தான் உண்மையானது என்பதைப் புரிந்து நான் பைஅத் செய்ய தீர்மானித்தேன்.

இந்தியா டெஸ்க் பணிகளைச் செய்து வருகிறது. அங்குள்ள தலைமையக நூலகத்தில் 70,000 நூல்கள் உள்ளன. இந்தியாவில் மஸ்ஹனே தஸாவீர் அதாவது புகைப்படங்களின் கருவூலம் என்ற பெயரில் பெரிய கண்காட்சி நடந்தது. புதிதாக விருந்தினர் இல்லம் கட்டப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றை தொகுப்பதற்கென்று ஒரு துறை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஃபஸ்லே உமர் அச்சகத்தில் புதிய மெஷின்கள் வந்துள்ளன. இவர்கள் சிறப்பாக பணிபுரிய ஆரம்பித்துள்ளனர்.

இந்த மேஜையில் வலது பக்கத்தில் இந்தியாவிலுள்ள நூல்கள் உள்ளன. அவை ஃபஸ்லே உமர் அச்சகத்திலிருந்து வெளியிடப் பட்டவையாகும். அல்லாஹ்வின் அருளால் நல்ல தரமிக்க நூல்களை இவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

நாம் புத்தகத்தை வெளியிட்டு விட்டு பைண்டிங் பணிகளை வெளியில் செய்வோம். ஆனால் இவர்களோ பைண்டிங் போன்றவற்றை கூட தங்களது பிரஸ்ஸிலேயே செய்துள்ளனர். அரபி டெஸ்க்ம் அல்லாஹ்வின் அருளால் நல்ல பணிகளை செய்துள்ளது.

M.T.A. 3 **அல் அரபிய்யா ஒளிபறப்பு**

**அப்துல் காதிர் சாஹிப் எழுதுகின்றார்:**

எனக்கு வயது 50. ஆரம்பத்திலேயே மார்க்கமில்லாத ஒரு வாழ்க்கையை நான் வாழ்ந்து விட்டேன். ஒரு வருடத்திற்கு முன்பு வியக்கத்தக்க ஒரு தோற்றத்தை நான் பார்த்தேன். அதை உள்ளம்தான் உணர்ந்தது. கண்கள் அதைப் பார்க்கவில்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நான் கஷ்ஃபில் கண்டேன். இந்த வி-யத்தை நான் மக்களிடம் கூறிய போது யாரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, என்னை மக்கள் எதிர்த்து அச்சுறுத்தினர். ஒரு வருடத்திற்குப் பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் பார்த்தேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திருக்குர்ஆனில் நாஸிக், மன்சூக் உண்டா என்பது பற்றி கேட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) இதற்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை. அப்போது இந்த வி-யம் தொடர்பாக எனக்குப் புரியவில்லை. பிறகு, தீடீரென்று M.T.A. பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான் கனவில் பார்த்த அதே வி-யம் அங்கும் தெரிந்தது. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) நாஸிக், மன்சூக் தொடர்பாக கேட்பதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அதற்கு பதில் கூறாமல் இருப்பதையும் கண்டேன். பிறகு இதுவே எனது ஜமாஅத் என்று நான் முடிவெடுத்தேன். எனது சகோதரருக்கும் தப்லீக் செய்தேன். அவரும் திருப்திகரமாக வி-யங்களை கேட்டு பைஅத் செய்ய முடிவெடுத்து விட்டார்.

**எகிப்திலிருந்து ஒருவர் எழுதுகின்றார்:**

இவரது பெயர் ஹுஸைன் ஆகும். ஏறக்குறைய 30 வருடங்களுக்கு முன் இவர் கனவில் அவர் ஒரு பாலைவனத்தில் மக்களின் ஒரு நீளமான வரிசையில் செல்வதைப் பார்த்தார். ஆனால், அந்த வரிசை மிகவும் நேர்த்தியாக இருந்தது. நான் எல்லாரையும் விட பின்னாலிலுள்ள வரிசையில் இருந்தேன். அவ்வாறிருந்தும் எல்லாரையும் விட முன்னால் இருக்கின்ற மனிதரை என்னால் பார்க்க முடிந்தது. அந்த நபர் ஒரு கொடியை ஏந்தியிருந்தார். அதில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று எழுதப்பட்டிருந்தது. எல்லா மக்களும் மிகுந்த கண்ணியத்துடன் கலிமா தய்யிபாவை கூறிக்கொண்டிருந்தார்கள். அந்த நாளிலிருந்து இந்த ஜமாஅத்தை நான் தேடிக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு நாள் எனக்கு M.T.A. அல் அரபிய்யா கிடைத்தது. இதுதான் இஸ்லாத்தின் உண்மையான பிரதிநிதியாக விளங்கும் ஜமாஅத் ஆகும் என்ற உண்மை எனக்கு தெரிந்தது. அப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் தயார் செய்யப்பட்ட இந்தக் கப்பலில் ஏறுவது என்று முடிவு செய்தேன். உள்ளத்தால் நிம்மதியை உணர்ந்தவாறு பைஅத் படிவத்தில் நான் கையெழுத்திட்டேன்.

**சிரியாவிலிருந்து மஹ்மூது சாஹிப் எழுதுகின்றார்:**

எனக்கு வெளிப்படையாக கல்வி அறிவு எதுவுமில்லை. ஆனால் எனக்கு மார்க்க அறிவு இருக்கின்றது. ஜமாஅத் அறிமுகமாவதற்கு முன்னர் நான் மவ்லவிமார்களிடம் உரையாடியிருக்கிறேன். எப்பொழுதும் அவர்கள் கூறுவதில் எனக்கு கருத்து வேறுபாடு இருந்து வந்தது. அவர்கள் கூறும் வி-யத்தில் எனக்கு திருப்தி ஏற்படவில்லை. எனது கருத்தில் நான் பிடிவாதமாக இருந்தேன். எதுவரையென்றால், சில மவ்லவிமார்கள் நீங்கள் முஸ்லிம்களே இல்லை என்று கூறினார்கள். நீங்கள் கூறுவதுதான் இஸ்லாம் என்றால், அதிலிருந்து நான் விலகுகின்றேன் என்று நான் கூறி வந்தேன். கனவில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்வதை கண்டேன். எப்போதும் அவர்களது புனித வாழ்க்கை தொடர்பான ஆட்சேபனைகளை தடுத்து வந்துள்ளேன். எங்களது குடும்பப் பின்னணியைப் பொருத்தவரை அது ஒரு கிறித்தவக் குடும்பமாக இருந்தது. எனது தந்தையார் இளைஞராக இருந்த போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எனது எல்லா குழந்தைகளும் பைஅத் செய்து அந்த பைஅத் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என உங்களிடம் துஆ செய்யுமாறு வேண்டுகிறோம்.

**ஜோர்டானிலிருந்து அப்துல் ஹமீது சாஹிப் எழுதுகின்றார்:**

உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவதற்காக நான் நீண்ட காலமாக M.T.A. அல் அரபிய்யாவை பார்த்து வருகின்றேன். இப்போது நீங்கள் உண்மையில் இருப்பதை அறிந்து பைஅத்

செய்ய விரும்புகின்றேன் என எழுதியுள்ளார். அவர் மேலும் எழுதுகின்றார்:

கனவில் மூன்று பெரியவர்கள் பள்ளிவாசலில் அமர்ந்து இருப்பதை நான் கனவில் கண்டேன். நடுவில் அமர்ந்திருந்தவர் தன்னை முஹம்மது (ஸல்) என அறிமுகப்படுத்திக் கொண்டார். மற்ற இரு நபர்கள் பற்றி அவர்களில் ஒருவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் இன்னொருவர் ஈஸா என்றும் கூறப்பட்டது. இதில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உருவம் M.T.A.வில் தெரிந்த அதே உருவமாகும்.

**எகிப்திலிருந்து ஒரு பெண் எழுதுகின்றார்:**

எனது கணவர் முஹம்மது அப்துல் ஹமீது சாஹிப் இப்போதுதான் பைஅத் செய்துள்ளார். பிறப்பிலிருந்தே அவருக்கு வலது கண் தெரியாது. எங்களுக்கு மூன்று மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். கனவில் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டுள்ளார். 2010ம் ஆண்டு பிப்ரவரி மாதம் M.T.A.வில் அதே படத்தை பார்த்துவிட்டு ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

**யூனுஸ் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:**

நான் கடந்த 4 மாதங்களாக இந்த ஜமாஅத் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றேன். நீங்கள் உண்மையாளர்கள் என்பதில் எனக்கு திருப்தி ஏற்பட்டுள்ளது. நான் எனது நிலைக்கேற்ப இறைவனிடம் பைஅத் செய்து விட்டேன். நான் எனது கனவிலும் கூட பைஅத் செய்து விட்டேன். பிறகு தொலைக்காட்சி மூலமாக நான் உங்களிடம் பைஅத் செய்துள்ளேன். நான் சூஃபியாக்களின் பல்வேறு ஜமாஅத்துகளில் இருந்து வந்தேன். நான் என்னுடைய ஷேக் ஆன சுல்தார் பத்ரானி அவர்களிடம், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் போதனைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டேன். அதற்கு அவர் நான் எனது கனவில் தாஹிர் நதீம் சாஹிப் அவர்கள் எனக்கு தப்லீக் செய்வதைக் கண்டேன். நான் எனது பகுதியைச் சேர்ந்த 75 வீடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். M.T.A.நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு அவருக்கு போதனை செய்தேன். நான் நீங்கள் உண்மையாளர்கள் என்பதையும் உங்களது ஜமாஅத் உண்மையில் நிலைத்துள்ளது என்பதன் மீதும் உறுதியான ஈமான் கொண்டுள்ளேன் என்று என்னிடம் கூறினார்.

**தாஹிர் சாஹிப் அவர்களுக்கு பாலஸ்தீனிலிருந்து ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார்:**

1999 -ல் எனது சகோதரர் ஹானி தாஹிரும் ஜமாஅத்தின் தோற்றுநருடைய வாதங்களையும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாகவும் ஜமாஅத்தின் கொள்கைகளை அறிந்தேன். நான் இவ்விஷயங்களை கேள்விப் பட்டிருந்தாலும் இவற்றை சிந்திப்பது எனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயமாக இருந்தது. எனவே நான் அல்லாஹ்விடம் துஆ செய்தேன். எனக்கு தெளிவான அடையாளம் கிடைக்கவில்லை. அஹ்மதிய்யத்தின் உண்மை அல்லது பொய் தெளிவாகும் வகையில் நீயே எனக்கு கனவைக் காட்டுவாயாக என்று நான் இறைவனிடம் துஆ செய்தேன். அதன் மூலமே நான் நல்ல தீர்வுக்கு வர முடியும் என்று நான் துஆ செய்தேன். நான் கனவில் பார்த்தேன். நான் ஒரு கிராமத்தில் காலியாக இருக்கின்ற தெருவில் நடந்து செல்கின்றேன். அதற்குப் பக்கத்தில் பல பழைய வீடுகள் உள்ளன. அவற்றில் பல வீடுகளும் நீண்ட நெடுங்காலமாக காலியாக இருக்கின்றன. இந்தத் தெருவில் நான் இரண்டு வலிமைமிக்க மனிதர்களைக் கண்டேன். அவர்களது கையில் பெரும் பெரும் தடிகள் இருந்தன. அவரது பக்கத்தில் ஒரு பெரிய கார் நின்று கொண்டிருந்தது. அதில் யாரும் பயணம் செய்யவில்லை. இந்த இரண்டு ஆற்றல்மிக்க மனிதர்கள் தடிகளை எடுத்துக் கொண்டு என் பக்கம் வர ஆரம்பித்தார்கள். அவர்கள் எனக்கு அருகில் வந்த போது அவர்களில் ஒருவர் இந்த இமாம் மஹ்தி உண்மையாளராக இருந்தால் இன்று அவர் எங்கள் கைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் காட்டட்டும் என்று கூறினார். நான் சிந்திக்கக் கூட முடியாமல் இருந்த சமயத்தில் திடீரென்று அந்த கார் அசைந்தது. யாரும் அதில் பயணம் செய்யவில்லை. ஆனால் அந்தக் கார் மிக வேகமாக இவர்களை நோக்கி வந்து அவர்கள் சுதாகரித்துக் கொள்வதற்கு முன்பே அவர்கள் மீது மோதி அவர்களை துண்டு துண்டாக்கி விட்டது. பயத்தால் என் கண்கள் திறந்தன. இந்தக் கனவின் மூலமாக எனது ஆசை நிறைவேறியது. எனது விருப்பத்திற்கேற்ப அல்லாஹ் எனக்கு ஹஸ்ரத் மஹ்தி (அலை) அவர்கள் உண்மையாளர் என்பதை புரிய வைத்து விட்டான். எனவே வேறு எந்த ஆதாரமும் தேவைப்படாத நிலையில் நான் பைஅத் செய்து விட்டேன்.

**சவூதி அரேபிய்யாவைச் சேர்ந்த ஒரு நபர் எழுதுகின்றார்:**

நான் 30 வருடங்களுக்கு முன்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை கனவில் ஒரு குகையில் சந்தித்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது முகத்தில் ஒளி மிளிர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் என் பக்கம் வந்து எனது பெயரை கேட்டார்கள். என்னுடைய பெயரை நான் கூறினேன். அப்போது அவர்கள் இரண்டு அல்லது மூன்று முறை நான் மஹ்தியாவேன். நான் இமாம் மஹ்தியாவேன் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) பச்சை நிற தலைப்பாகை அணிந்திருந்தார்கள். அப்போது எனக்கு அவர்கள் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கனவில் என்னிடம் உனது மனைவி எனது மகளாவார்கள் என்று கூறினார்கள். அவளோடு நல்ல முறையில் நடந்து கெள்ள வேண்டும். அவளை கஷ்டப்படுத்தக் கூடாது என்று கூறினார்கள். அதற்குப் பிறகு நான் அவளிடம் நல்ல முறையில் நடந்து கெள்கிறேன்.

பிறகு ஒன்றரை வருடம் முன்பு நான் M.T.A.வைப் பார்த்த போது நான் கனவில் பார்த்த அதே வி-யம் எனக்கு நினைவில் வந்தது.

**சல்தனதே அம்மான் என்ற இடத்திலிருந்து ஒருவர் எழுதுகின்றார்:**

ஒரு நீண்ட காலமாக நான் உண்மையைத் தேடிக் கொண்டிருந்தேன். அதை நான் இன்று பெற்றுக் கொண்டேன். அல்ஹம்துலில்லாஹ். முஸ்லிம்களின் வீழ்ச்சியைப் பார்த்து அந்தோ! ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த உம்மத்தின் முன்னேற்றத்திற்காக மீண்டும் வர வேண்டும் என்ற எண்ணம், ஆசை ஏற்பட்டது. நான் பல்வேறு சேனல்களைத் திருப்பிக் கொண்டிருந்த போது திடீரென்று தற்செயலாக எனக்கு M.T.A. பார்க்க நேர்ந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படத்தைப் பார்த்து எனக்கு அது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் படம் என்று தோன்றியது. அந்தப் படம் எனது உள்ளத்தில் பதிந்து விட்டது. ஒரு நாள் எனது ஒரு நண்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றிவிட்டார்கள் என்று கூறினார். தஜ்ஜால் என்பதன் கருத்து கிறித்தவ பாதிரிமார்கள் ஆவார்கள் என்றும் கூறினார். நான் ஆரம்பத்தில் இதை கடுமையாக எதிர்த்தேன். ஆனால் பிறகு எனக்கு உண்மை புலப்பட்டது. இந்த இரவில் இரண்டு மணி வரை நான் M.T.A.வை பார்த்துக் கொண்டிருந்தேன். ஜமாஅத் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதிருந்த அன்பு வளர்ந்து கொண்டே சென்றது. எங்களை சரியான இஸ்லாத்தின் பக்கம் வழிகாட்டிய இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். அதனை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பையும் அவன் எனக்கு தந்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களையும் இரண்டாவது கலீஃபாவின் தஃப்ஸீரே கபீரையும் நான் படித்தேன். அவை எனக்கு மிகவும் விருப்பமானதாக இருந்தன.

**சவூதி அரேபிய்யாவிலிருந்து ஒரு பெண் இவ்வாறு எழுதியுள்ளார்:**

நான் மதீனா முனவ்வராவைச் சார்ந்தவள். மக்காவில் நான் படித்துக் கொண்டிருக்கின்றேன். அமீருல் முஃமினீன் அவர்களே! இஸ்லாத்தின் சூரியன் மற்றும் சந்திரனே! என் தரப்பிலிருந்தும் ஸலாத்தின் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். பிறகு மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி புரிந்த அன்ஸார் இருந்தார்கள். இப்போது அன்ஸார் சந்ததிகளில் வந்துள்ள நாங்கள் இமாம் மஹ்தியின் அன்ஸார் ஆவதற்குத் தயாராக இருக்கின்றோம். எனது பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று எழுதியுள்ளார்.

**சவூதி அரேபிய்யாவிலிருந்து இன்னொருவர் இவ்வாறு எழுதியுள்ளார்:**

நான் இமாம் மஹ்தி (அலை) அவர்களைப் பற்றி கேள்விப்பட்டதும் நான் உடனடியாக அவரை ஏற்றுக் கொண்டேன். அதற்கு காரணம் எனக்கு 11 வயது ஆனபோது நான் துஆ செய்தேன். மேலும் நான் இறைவா! இமாம் மஹ்தி (அலை) அவர்களைப் பின்பற்றுபவர்களில் ஒருவராக என்னை ஆக்குவாயாக என்று துஆ செய்தவாறு உண்மையைத் தேடிக் கொண்டிருந்தேன். நீயே அவரைப் பின்பற்றுபவர்களுள் ஒருவராய் இருக்கின்றாய் என எனக்குப் பதில் வந்தது. எனக்கு பல கனவுகளும் கஷ்ஃபுகளும் வந்தன. அவற்றின் மூலம் இமாம் மஹ்தி தோன்றி விட்டார் என்பதில் எனக்கு உறுதியான எண்ணம் ஏற்பட்டது. எனவே எனது பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என இவர் எழுதியுள்ளார்.

பலருக்கும் சிறு வயதிலேயே கனவுகளில் இப்படிப்பட்ட செய்திகளை அவர்களுக்கு இறைவன் தெரிவித்து விட்டான். பிறகு M.T.A. மூலமாக இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தையோ அல்லது கலீஃபாக்களின் புகைப்படத்தையோ அவர்கள் பார்க்கின்ற போது அவர்களுக்கு ஏதாவதொரு விதத்தில் உண்மையை அடையாளம் கண்டு கொள்ள முடிகின்றது.

M.T.A. International–ன் Management Board –ன் 14 Department –கள் செயல்படுகின்றன. 123 ஆண்களும் 52 பெண்களும் இதில் பணிபுரிகின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் 24 மணி நேரம் இவர்கள் டியூட்டி கொடுக்கின்றார்கள். இன்டர்நெட்டிலும் M.T.A.வின் விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த வருடம் Streamings பணிகளை தலைமையகத்தில் ஆரம்பித்துள்ளோம். இதற்கு முன் இந்த சர்வீஸ் வெளியிலுள்ள ஒரு கம்பெனி மூலமாக நடந்தது. இந்த வருடம் M.T.A.வின் மூன்று சேனல்களுள் சேர்ந்து பல்வேறு மொழிகளில் மொழியாக்கங்களின் Streaming ம் துவக்கப்பட்டு விட்டது. இப்போது மொழியாக் கங்களையும் சேர்த்து 16 பல்வேறு Stream கள் ஒரே சமயத்தில் ஒளிபரப்பப்படுகின்றன. Black Berry, I Phone மற்றும் Android Phone –களில் M.T.A.வைப் பார்க்க முடியும்; இந்த வருடம் உலகத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட Mobile Phone System –ல் மூன்று சேனல்களும் துவக்கப்பட்டு விட்டன. உலகில் எங்கிருந்தாலும் இவற்றில் M.T.A.வின் ஒளிபரப்பை ஒருவரால் பார்க்க முடியும். கேட்க முடியும்ம; பயணத்தின் போது கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தில் I Pad மூலமாக M.T.A.வைப் பார்க்க முடியும். இந்த வருடம் கிடைத்த ரிப்போர்ட்டின்படி ஆயிரக்கணக்கான மக்கள் I Phone மூலமாக மாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சிகளைக் கேட்டு பயனடைந்துள்ளனர்.

M.T.A. மூலமாக அல்லாஹ்வின் அருளால் பைஅத்துகளும் நடந்துள்ளன.

**பெனின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்:**

நாங்கள் ஓஜோ என்ற இடத்திற்கு தப்லீக் செய்யச் சென்றிருந்தோம். அங்கு இமாம் மஹ்தி மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருள்களை எடுத்துக் கூறியவாறு ஜாஅல் மஸீஹ் (மஸீஹ் வந்து விட்டார்) என்ற பெயரில் Folder வழங்கப்பட்டது. இந்த Folder –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படமும் எனது படமும் இருந்தது. இதைப் பார்த்த அந்த இமாம் மிகுந்த துடிப்புடன் தனது உள்ளூர் மொழியில் இது எனது நண்பரின் படமாகும் என்று கூறினார். அப்போது இமாம் சாஹிப் அறையிலிருந்த டி.வி.யை சுவிட்ச் செய்தார். அதில் M.T.A.வந்தது. அவர் எனது புகைப்படத்தைக் சுட்டிக்காட்டியவாறு இவர் தினமும் வந்து எங்களுக்கு கற்றுத் தருகின்றார். இவர் எனது நண்பர். நாங்கள் இவரை எப்படி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டார். பிறகு பைஅத் படிவத்தைப் பூர்த்தி செய்தவாறு இமாம் சாஹிப் தமது குடும்பத்தினருடன் அஹ்மதியாகி விட்டார்.

**பெனினில் உள்ள பேஸ்லா ரீஜியனின் உள்ளூர் முபல்லிக் கூறுகின்றார்:**

ஒரு பகுதியிலிருந்து ஒரு ஆசிரியர் உங்களது Folder ஜாஅல் மஸீஹ் (மஸீஹ் வந்து விட்டார்) கிடைத்தது என்று தொலைபேசியில் கூறினார். நான் உங்களைச் சந்திக்க விரும்புகின்றேன் என்றும் கூறப்பட்டது. கிராமம் மிகத் தொலைவில் இருந்தது. நாங்கள் அங்கு சென்றோம். சிறிய அறிமுகத்திற்குப் பிறகு அவர் கூறினார். கடந்த 3 வருடங்களாக நான் M.T.A சேனல் பார்க்கின்றேன். இந்த மக்கள் யார் என தெரிந்து கொள்வதற்காக முயற்சி செய்து வந்தேன். இவர்கள் சிறந்த முறையில் பேசி மக்களுக்கு தர்பிய்யத் கொடுக்கின்றார்கள். இவர்களைப் பற்றி அறிய விரும்பினேன். இறுதியில் உங்கள் folders மூலமாக உங்களைப் பற்றி தெரிந்தது. நாங்கள் உங்களோடு இணைய விரும்புகின்றோம் என்று கூறினார்கள். இவ்வாறு அவர்கள் பைஅத் செய்து நமது தப்லீக் சுற்றுப் பயணங்களில் செல்ல ஆரம்பித்தார். அல்லாஹ்வின் அருளால் இந்த சாஹிப் மூலம் 123 புதிய நபர்கள் கணிசமாக நமக்கு கிடைத்துள்ளார்கள்.

**ஹாலந்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்:**

நமது ஒரு நண்பருக்கு 2000 ஆம் ஆண்டில் M.T.A. காட்டப்பட்ட போது அதில் அவர் சரியான கவனத்தை செலுத்தவில்லை. இப்போது முஸ்லிம்களின் மோசமான நிலை, வீழ்ச்சி ஆகியவற்றைப் பார்த்து அவருக்கு இதன் பக்கம் கவனம் ஏற்பட்டது. மேலும் இது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வர வேண்டிய காலமாகும் என்ற சிந்தனை அவருக்கு வந்ததும் அவருக்கு M.T.A. பற்றிய

எண்ணமும் இமாம் மஹ்தி பற்றி அதில் பேசப்பட்டதும் நினைவுக்கு வந்தது. இவ்வாறு 11 வருடங்கள் கழிந்த பிறகு அவர் M.T.A.வை தேடிக் கண்டுபிடித்து அதை மீண்டும் பார்க்க ஆரம்பித்தார். சில காலம் கழிந்த பிறகு அவரது நெஞ்சம் திறந்தது. பிறகு பைஅத் செய்து அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

**ஸ்பெயினின் முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகின்றார்:**

மராகிஸ்ஸூடன் தொடர்புடைய ஒரு இளைஞரான யூசுஃப் பின் முஹம்மது அல்பாகர் சாஹிப் அவர்கள் ஸ்பெயினிலுள்ள பேஸினோனாவில் இருந்து வந்தார். இவர் 2010 ஆம் ஆண்டு பைஅத் செய்து ஜமாஅத்தில் நுழைந்தார். இவர் வேலை செய்த இடத்தில் அவருடன் யோகாவா விட்னஸைச் சேர்ந்த ஒரு பையனும் வேலை செய்து வந்தார். அவர் தினந்தோறும் எனக்கு கிறித்தவத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறினார். இஸ்லாத்தின் மீது சில ஆட்சேபணைகளை எடுத்து வைப்பார். அதற்கு என்னிடம் பதில் இல்லாமல் இருந்தது. நான் அறியாத நிலையில் கிறிஸ்தவத்தின் தாக்கம் என் மீது ஏற்பட்டது. நான் அவருடன் ஒருமுறை சர்ச்சிற்கு போனேன். இன்பங்கள் நிறைந்த சபைகளுக்கு அழைத்துச் சென்றார். எனக்கு வேலை வாங்கித் தருவதாக பேராசை ஊட்டினார். கிறிஸ்தவத்தை ஒருவேளை நான் ஏற்றுக் கொண்டிருப்பேன். தற்செயலாக என் வீட்டிலுள்ள ரிஸீவர் பழுதடைந்தது. புதிய ரிஸீவர் வாங்கி வந்தேன். பழைய சேனல்களை நான் Delete செய்து கொண்டிருந்த சமயத்தில் M.T.A. அல் அரபிய்யாவை பார்த்தேன். அதைப் பார்த்த போது கிறிஸ்தவம் தொடர்பான நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் பார்த்தேன். பிறகு தொடர்ந்து அதில் ஆர்வம் வளர்ந்தது. கிறிஸ்தவர்கள் செய்த எல்லா ஆட்சேபணைகளுக்கும் எனக்கு விடை கிடைத்தது. ஜோகாவா விட்னஸ்காரர்கள் இஸ்லாத்தின் மீது செய்த ஆட்சேபணைகளுக்கும் அதில் பதில் இருந்தது. அந்தப் பதில்களை நான் எனது நண்பருக்கு கொடுக்க முடிந்தது. பிறகு அவர் எனக்கு பின்னால் வருவதை விட்டு விட்டார். **கிறிஸ்தவனாக மாற இருந்த நான் அஹ்மதிய்யத்தின் பரக்கத்தால் மீண்டும் இஸ்லாத்தின் பக்கம் வந்து விட்டேன்.**

**நார்வேயின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்:**

M.T.A. மூலமாக ஒரு அரபு பெண் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பைஅத் செய்த தகவல் தெரிந்தது. அவர்கள் இங்கிருந்து 125 மைல் தூரத்திலுள்ள ஒரு நகரத்தில் வாழ்ந்து வந்தார். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இருவருக்கும் வயது 14 தான். இவர் கூறுகின்றார். முரப்பி சாஹிபுடனும் அவரது மனைவியுடனும் தொடர்பு கொள்வதற்கு அவரது வீட்டிற்குச் சென்ற சமயத்தில் இவரது தாயாரை சந்தித்தார். அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். ஜமாஅத் அமைப்பு அவருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காக அந்தப் பெண் காத்திருந்ததாகக் கூறினேன். அவருக்கு நார்வேயிலுள்ள பள்ளிவாசல் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டது. அவர் கூறுகின்றார்:

2006 ஆம் ஆண்டில் அவர் தொலைக்காட்சியின் பல சேனல்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது திடீரென்று அவரது பார்வை ஒரு சேனலைப் பார்த்துச் சென்று விட்டது. அந்த சேனலில் சிலர் அரபி பேசிக் கொண்டிருந்தனர். இறைவன், முஹம்மது ரஸூலுல்லாஹ் ஆகியோரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். இது எனக்கு ஒரு சிறப்பான வி-யமாக தெரிந்தது. பிறகு பிள்ளைகள் டி.வியைப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் இந்த சேனல் தொலைந்து விட்டது. மிக அதிகமாக தேடியும் அது கிடைக்கவில்லை. 2009-ல் டி.வியை ஒரு முறை போட்ட போது M.T.A. -ன் இரண்டாவது சேனல் கிடைத்தது. பல வருடங்களாக தொலைந்து போன ஒரு பொருள் கிடைத்தது போன்று நான் உணர்ந்தேன். **அந்தப் பெண் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்ததுமே அந்த சமயத்திலேயே இந்த நபர் பொய்யராக இருக்க முடியாது என்பதில் எனக்கு உறுதி ஏற்பட்டது.**

(தொடரும்)

**தமிழில்:**

**மவ்லவி M. ரஃபீக் அஹ்மது H.A.**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தாயார்

# ஹஸ்ரத் சாஹிப் ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபா அவர்களின் அறிமுகமும் தொண்டுகளும்

சய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மகன் வழிப்பேத்தியும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மூத்த மகளும், சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தாயாரும், ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியுமாகிய ஹஸ்ரத் சாஹிப் ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபா அவர்கள் கடந்த 29 ஜூலை 2011 அன்று இந்திய நேரப்படி மாலை 7.15 மணியளவில் பாகிஸ்தானிலுள்ள ரப்வாவில் தமது 100-வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாரிசுகளில் மிக நீண்ட ஆயுளைப் பெற்ற இவர் சில வருடமாக நோய்வாய்ப்பட்டு பலவீனம் அதிகமாகிய காரணத்தால் சென்ற ஆறு மாத காலமாக படுக்கையில் இருந்தார்கள்.

காதியானில் 2005 ஆம் வருடம் நடைபெற்ற ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்திருந்த இவர் இரண்டு வாரம் அங்கே தங்கியிருந்து தமது மகனாராகிய ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை, அவர்கள் கலீஃபாவாக ஆன பிறகு முதலாவதாகவும், கடைசியாகவும் சந்தித்து தனது கண்ணியமிக்க மகன் கிலாஃபத் பொறுப்பில் அமர்ந்திருப்பதை நேரில் கண்டு பெருமிதம் கொண்டார்கள்.

காதியானில் தங்கியிருந்தபோது அங்குள்ள புனிதத் தலங்களை ஸியாரத் செய்தார்கள். மேலும் காதியான் லஜ்னா அமைப்பின் உறுப்பினர்களையும் சந்தித்தார்கள். இவர்கள் 25 மே 1933 இல் தமது 22 வயதில் வஸிய்யத் அமைப்பில் இணைந்தார்கள்.

இவர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தூய பிள்ளைகளில் இரண்டாவதும், மகள்களில் முதலாவதுமாவார்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரை விட மூத்தவர். ஹஸ்ரத் சாஹிப் ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபா அவர்கள் 1911 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கும் உம்மே நாஸிரா என்ற ஹஸ்ரத் சாஹிப் ஸாதீ மஹ்மூதா பேகம் சாஹிபாவிற்கும் பிறந்தார்கள்.

இவருடைய கல்வி மற்றும் ஒழுக்கப் பயிற்சி மிகவும் ஆன்மீக, மார்க்க சூழலில் அமைந்திருந்தது. மார்க்க வகுப்புகளில் பங்கெடுத்து வந்த இவர் 1929 ஆண்டு பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மவ்லவி தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். 1931 இல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இவர் F.A. வரை கல்வி பயின்றார்.

இவருடைய நிக்காஹ்வை ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா மன்சூர் அஹ்மது சாஹிபுடன் 2 ஜூலை 1934 இல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நடத்தினார்கள்.

இவரின் நிக்காஹ்வில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், இறைவனின் உண்மையான அடியாராகுதல் மற்றும் அதன் தேவைகளை நிறைவு செய்தல் தொடர்பாக உரை நிகழ்த்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாரிசுகள் தங்கள் வாழ்க்கையை மார்க்கத்திற்காக அர்ப்பணித்து வாழ்வாதாரம் இல்லாத இடத்தில் வாழ்வதை போன்று வாழ்வது கடமையாகும்.”

இதற்கேற்ப அல்லாஹ்வின் அருளால் இந்த தூய தம்பதிகள் மார்க்கத்திற்கு தொண்டாற்றியும், மனிதயினத்திற்கு சேவை செய்தும் தமது வாழ்வை கழித்தார்கள். சாஹிப் ஸாதீ நாஸிரா பேகம் அவர்கள் மிக நீண்ட காலமாக ரப்வாவின் சத்ர் லஜ்னா (மாதர் அணித் தலைவி) ஆக தொண்டாற்றினார்கள். அல்லாஹ்வின் அருளால் ரப்வாவின் மாதர்

அணிக்கு மிக சுறுசுறுப்பாக மார்க்க ஒழுக்கப் பயிற்சி வழங்கினார்கள்.

இவர் நல்ல இறைவணக்கம் செய்பவராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும், பணிகளை முறையாக செய்பவராகவும், சேவை மனப்பான்மையுடைய பெண்மணியாகவும் விளங்கினார். கிலாஃபத்துடன் அளவில்லா அன்பும் நேசமும் இவருக்கு இருந்தது. இவர் சிறுவயதிலிருந்தே மார்க்க சூழலிலும் கிலாஃபத்தின் அரவணைப்பிலும் தர்பிய்யத் பெற்று வளர்ந்தார்கள்.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபாவின் கணவர் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா மன்ஸூர் அஹ்மது சாஹிப் 13 மார்ச் 1911 ம் ஆண்டு காதியானில் பிறந்தார்கள். 10 டிசம்பர் 1997ல் மரணமடைந்தார்கள். தன் கணவர் மரணித்த பிறகு மிக நீண்ட காலம் பொறுமையுடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ்ந்து வந்தார்கள். அல்லாஹ் இவருக்கு இரண்டு மகள்களையும் மூன்று மகன்களையும் வழங்கினான். ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஆகிய ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது இவரின் கடைசி புதல்வராவார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தம்முடைய அனைத்து பிள்ளைகளுடனும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொண்டார்கள். எனினும் தமது மூத்த மகள் என்ற காரணத்தால் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபாவிடம் அன்பும் நேசமும் சற்று அதிகமாகவே இருந்தது. இவர்களின் சிறு சிறு விஷயத்தையும் கருத்தில் கொண்டு எல்லா நேரமும் அவர்களின் விபரத்தை அறிவது தந்தையின் வழக்கமாக இருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களுடன் முதல் முறையாக 1924 இல் காஷ்மீர் சென்றார்கள். வழியில் கடுமையான ஐஸ் மழை பொழிந்தது. ஆடுகளுக்கான தீனி வைக்கப்பட்டிருந்த இரண்டு அறைகளில் இரவு தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. விறகுகளை ஒன்று சேர்த்து தீ மூட்டி அனைவரும் குளிர்க் காய்ந்தனர். மேலும் தத்தமது ஆடையை பிழிந்து காயவைத்தனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தன்னுடைய தடித்த கம்பளிப் போர்வையை தனது அன்பு மகளுக்கு கொடுத்து போர்த்திக்கொள்ளுமாறு கூறி தன் மகள் மீது தனிப்பட்ட கவனமிருப்பதன் முன்மாதிரியை காட்டிய சிறந்த தந்தையாக விளங்கினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் அதிகமான பயணத்தில் உடன் செல்லும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1913 இல் அல்ஃபஸ்ல் பத்திரிகை தொடங்க தீர்மானித்த போது அன்னாரின் மனைவி ஹஸ்ரத் சாஹிப் ஸாதீ மஹ்மூதா பேகம் சாஹிபா அவர்கள் ஆரம்ப மூலதனமாக தன்னுடைய மற்றும் தன் மகள் (அதாவது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தாயார்) ஹஸ்ரத் நாஸிரா பேகம் சாஹிபாவினுடைய நகைகளை கொடுத்தார்கள். இவ்வாறு அல்ஃபஸ்ல் நாளிதழ் மீது ஹஸ்ரத் சாஹிப்ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபா மற்றும் அவரின் தாயாரின் பேருபகாரம் உள்ளது.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபா அவர்களுக்கு கட்டுரை எழுதும் ஆர்வம் அதிகமாக இருந்தது. குறிப்பாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை என்ற தலைப்பில் அதிகம் எழுதினார்கள். இவர்களின் கட்டுரைகள் அல்ஃபஸ்ல் பத்திரிகையில் வெளிவந்து கொண்டே இருந்தது. அல்ஃபஸ்ல் பத்திரிகையில் சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற சிறப்பு பதிப்பு 1931 இல் வெளிவந்தது. இதில் இவர்களின் கட்டுரையும் வெளிவந்தது. இந்த சிறப்பு பதிப்பில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி), ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி), ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) ஆகியோரின் கட்டுரையும் வெளியானது.

கராச்சி லஜ்னா இமாயில்லாஹ்வின் சென்ட்ரல் கமிட்டி சார்பாக 1952 இல் தர்சுல் குர்ஆன் ஆரம்பிக்கப்பட்டது. இதல் முதல் தர்ஸாக ஹஸ்ரத் சாஹிப் ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபா அவர்கள் கொடுத்தார்கள். மேலும் சில மாதகாலம் கராச்சியில் தங்கியிருந்த அவர்கள்

அங்குள்ள லஜ்னாக்களுக்கு சிறந்த தர்பிய்யத் கொடுத்தார்கள். சாஹிப்ஸாதீ அம்மத்துல் குத்தூஸ் சாஹிபா அவர்கள் (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சகோதரி) தமது தாயார் தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்:

"என் தாயார் மிக நீண்ட காலமாக ரப்வாவின் சத்ர் லஜ்னாவாக இருந்தார்கள். கைத்தொழில் கைவினைத் துறை பொறுப்பையும் தன்னிடமே வைத்து கொண்டார்கள். எந்த பெண்களுக்கு கைவினை கண்காட்சியின் வேலை கொடுப்பார்களோ அவர்களுக்கு துணியும் நூலும் எடை போட்டுத் தருவார்கள். வேலை முடிந்த பிறகு ஆடையாக திரும்பி வரும் போது மீண்டும் எடை போடப்படும். இந்தக் காட்சி இப்போதும் என் கண்முன் இருக்கிறது. என் தாயார் துணிகளை தராசு கொண்டு நிறுத்தது ஜமாஅத்தின் பணத்தில் கையாடல் இருக்கக் கூடாது என்பதற்காகவே ஆகும்."

சிறுவயதில் தங்களுடன் தாயார் நடந்து கொண்டது பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

"என் தாயார் பெரியவர்களிடம் முக்கியமான விஷயங்களை பேசும்போது என்னைப் போன்ற சிறு பிள்ளைகளை தொழச் சொல்லி அங்கிருந்து அனுப்பி விடுவார்கள். இப்போது தானே தொழுது விட்டு வந்தோம்; பிறகு ஏன் மீண்டும் நம்மை தொழுமாறு கூறுகிறார்கள் என்று பல முறை எண்ணியதுண்டு. இவ்வாறு அனுப்பக் காரணம், பெரியவர்களின் பேச்சி லிருந்து சிறியவர்களை தூரம் வைத்து பிள்ளைகளின் உள்ளத்தில் தேவையில்லாத, மறைவான விஷயங்கள் அமராமல் இருக்கவே ஆகும்."

ஹஸ்ரத் சாஹிப்ஸாதீ நாஸிரா பேகம் சாஹிபாவிற்கு அல்லாஹ் நூறு ஆண்டு ஆயுளை வழங்கினான். விபரம் தெரிந்த காலத்திலிருந்தே இவர்கள் கிலாஃபத்தை தமது அருகில் கண்டார்கள். மேலும் அதன் நிழலிலேயே முழு வாழ்க்கையையும் கழித்தார்கள். இவருக்கு தம் தந்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடமிருந்து தந்தையின் பரிவு கிடைத்திருந்த அதே சமயத்தில், கலீஃபத்துல் மஸீஹ் என்ற முறையில் இவரும் தம் தந்தைக்கு கட்டுப்படுவதன் உயர்ந்த முன்மாதிரியைக் காட்டினார்கள். பிறகு தமது இரு சகோதரர்களாகிய ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) மற்றும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) ஆகியோர் கலீஃபத்துல் மஸீஹ் ஆன போது கிலாஃபத்தை நேசிப்பவரிடம் இருக்க வேண்டிய அதே கட்டுப்படுதல், அன்பு நேசம், அர்ப்பணித்தல் இவரிடம் தொடர்ந்தது.

பிறகு தனது பாசமிகு மகனுக்கு (ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு) அல்லாஹ் கிலாஃபத்தின் மகுடம் சூட்டியபோது தன் மகனாக இருந்தாலும் கிலாஃபத்திற்கான கட்டுப்படுதலின் எதிர்பார்ப்புகளில் எந்தக் குறையும் ஏற்பட அனுமதிக்கவில்லை. அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இவர் பேறுபெற்ற பெண்ணாவார். ஏனெனில் இவரின் தந்தை, இரு சகோதர்கள், ஒரு மகன் ஆகியோர் கிலாஃபத் அரியணை யில் மகுடம் சூட்டப்பட்டவர்களாவர்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தாயார் அவர்களுடைய ஜனாஸா தொழுகையை பாகிஸ்தான் நாஸிர் ஆலா 30.07.2011 அன்று தொழவைத்தார்கள். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அல்லாஹ் இவருக்கு மன்னிப்பையும் மறுமையில் தனது நெருக்கத்தையும், சுவர்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்தையும் வழங்குவானாக. ஆமீன்.

**(நன்றி : அல்ஃபஸ்ல் பத்திரிகை 1.8.2011)**

**தமிழில்:**

**முஅல்லிம் M. ஷாஜஹான்**

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

# NABI VAZHI Tamil Monthly September 2011

**Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211**


## முல்லாக்களின் பீதி !

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்னறிவிற்கேற்ப இறுதி காலத்தில் தோன்றிய இமாம் மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் அஹ்மதி முஸ்லிம்கள். பனிமலையை கடந்து செல்ல நேர்ந்தாலும் அவரிடம் பைஅத் செய்யுங்கள் என்ற மாநபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க காலத்தின் இமாமை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி நுபுவ்வத் வழியில் கிலாஃபத் மீண்டும் உருவாகும் என்ற முன்னறிவிப்பிற்கேற்ப தற்போதும் ஒரே தலைமையிலான கிலாஃபத்தின் கீழ் ஒன்று சேர்ந்து இஸ்லாத்தின் கொடியை உலகில் பல நாடுகளில் பறக்கச்செய்து கொண்டிருப்பவர்கள் அஹ்மதி முஸ்லிம்கள். திருக்குர்ஆன், சுன்னத், ஹதீஸ் ஆகியவற்றையே முழு உலகிலும் நூல்கள், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் மூலமாக பரப்பி இஸ்லாத்திற்காக தொண்டு செய்பவர்கள் அஹ்மதி முஸ்லிம்கள்.

சமீபத்தில் ரமலானில் நோன்பின் சிறப்பு குறித்து இதுவரை எந்த ஆலிம்களோ பாக்கவிகளோ, உலவிகளோ கொடுக்காத அற்புத விளக்கத்தை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தமிழன் தொலைக்காட்சியிலும், கேப்டன் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பி வந்தது. இது வெறும் தர்கா, தாவீசு, வட்டி, வரதட்சணை போன்ற அரைத்த மாவையே பல வருடங்களாக அரைத்துத் தள்ளும் முல்லாக்களின் வயிற்றில் புளியை கரைத்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய கத்மே நுபுவ்வத் பற்றிய பேருரையும் அதில் மாநபி (ஸல்) அவர்கள் மீதும் சஹாபா பெருமக்கள் மீதும் பற்றும் பேரன்பும் கொண்டிருந்த அஹ்மதி முஸ்லிம்கள் கலீஃபாவின் பேருரையின் போது ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா என்று கூறும்போது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் என்ற உணர்ச்சி மிக்க ஓசை எழுப்பிய காட்சியும் ஒளிபரப்பாகியது. அஹ்மதிகள் மாநபி (ஸல்) அவர்களை ஏற்காதவர்கள் என்றும், திருக்குர்ஆனை பின்பற்றாதவர்கள் என்றும் மக்கள் மத்தியில் இது நாள் வரை கூறி வந்த பொய்யின் முகத்திரை கிழிய ஆரம்பித்ததும், பீதியில் உறைந்து போன ஆலிம்கள் ஒன்று கூடி சில முஸ்லிம் அரசியல் கட்சி, கழகங்களோடு இணைந்து தமிழன் தொலைக்காட்சியிலும், கேப்டன் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த நமது நிகழ்ச்சியை நிறுத்த முயற்சித்து அதில் தாம் வெற்றி பெற்றதாகவும் அறிவித்தது அவர்களின் உச்சகட்ட அச்சத்தையும் திராணியற்ற நிலையையும், அஹ்மதி முஸ்லிம்களின் ஆதாரப்பூர்வமான விளக்கங்களுக்கு பதில் சொல்ல முடியாத கையாலாகாதத் தனத்தையும் காட்டுகிறது.

இஸ்ரவேல் சமுதாயத்திற்காகத் தோன்றிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் 2000 ஆண்டுகளாக உயிருடன், உடலுடன், விண்ணில் வாழ்கிறார்கள் என்ற ஆலிம்களின் மூடக் கொள்கையை திருக்குர்ஆன் அடிப்படையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தவிடு பொடியாக்கியது. எமது நிகழ்ச்சியைப் பார்த்த நல்லியல்பு கொண்ட பலரும் இந்த மூடக் கொள்கையில் இருந்து வெளிவரத் தொடங்கினர். ஆதாரங்களால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இன்றளவும் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க திராணியற்ற இந்த ஆலிம்கள் எமது நிகழ்ச்சியை தடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பொதுமக்களோ நிகழ்ச்சி தடை செய்யப்பட்டதை அறிந்து எம்மை தொடர்பு கொண்டு தெளிவு பெற்று வருகின்றனர்.

உண்மை வந்து விட்டது; பொய் அழிந்து விட்டது; நிச்சயமாக பொய் அழியக்கூடியதே என்பதை மக்கள் புரியும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பற்றி அறிய தொடர்பு கொள்ள வேண்டிய**

**இலவச அழைப்பு எண்**
**TOLL FREE NUMBER** : **1800 4254 0000**


If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**

**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174



Printed & Published By : **K. NASIR AHMED**
From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. MUZZAMMIL AHMAD**
Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.